வயது வந்தவர்
பதிப்பு

# என் சபையைக் கட்டுவேன்...

(மத்தேயு 16:18)





**என்.இ.சி.எஃப் 40 நாள் உபவாச & ஜெபம்** • (1 ஆகஸ்ட் – 15 செப்டம்பர் 2014)





# என் சபையைக் கட்டுவேன்...

(மத்தேயு 16:18)

**40 நாள் உபவாச & ஜெபம்**

(1 ஆகஸ்ட் – 15 செப்டம்பர் 2014)

# நன்றி நவில்தல்

இந்தக் கையேட்டிற்கு எழுதி உதவின நண்பர்களுக்கும்

போதகர்களுக்கும் பாராட்டுகளும் நன்றியறிதலும் தெரிவிக்க விரும்புகிறோம்.

சகோதரர் ஜோஷ் இயோ, சகோதரி கேரலின் ஆர் போய்ன், சகோதரர் வோங் யாங் சூன், சகோதரி ஜோய்ஸ் தோங், அருட்திரு டாக்டர் பிலிப் கோ, போதகர் கேரன் டான், போதகர் டாக்டர் ச்சான் ஆ கீ, அருட்திரு லோ சூன் ச்சோய், அருட்திரு வூன் யுவென் வோ, போதகர் டாக்டர் பவுல் ச்செென்,

மற்றும் அருட்திரு லிம் யூ ச்சுவென்.

வருடக்கணக்கில் உழைத்த ஆசிரியர் சகோதரி டெஃப்பீ லோ விற்கு சிறப்பான நன்றி பாராட்டுகள்.



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | முன்னுரை | P6 |
| ஆகஸ்ட் 07-10 | மணவாட்டியாகிய என் திருச்சபை | P7 |
| ஆகஸ்ட் 11-17 | கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல் | P11 |
| ஆகஸ்ட் 18-24 | சோதனை மற்றும் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை | P18 |
| ஆகஸ்ட் 25-31 | கிறிஸ்துவின் சரீரத்தில் ஒற்றுமை | P25 |
| செப்டம்பர் 01-07 | தேசத்தை ஒழுங்குபடுத்துவதில் திருச்சபை | P32 |
| செப்டம்பர் 08-14 | திருச்சபையும் இராஜ்ஜியத்தின் சுவிசேஷமும் | P39 |
| செப்டம்பர் 15 | தேசத்திலும் தேசிய மேம்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்துதல் | P46 |

# முன்னுரை: என் சபையைக்கட்டுவேன்

*Foreword by Eugene Yapp*
*Secretary-General, NECF Malaysia*

இந்த வருட 40 நாள் உபவாச ஜெபத்தின் கருப்பொருள் “என் சபையைக்கட்டுவேன்” (மத்தேயு 16:18) 40 நாள் உபவாச ஜெபத்தின் கையேட்டில் இது 14வது பதிப்பு. இந்த வருடாந்திர ஜெப பிரயாசத்தை நிலை நிறுத்தின தேவனுக்கு ஸ்தோத்திரம்.

நமது தேசம் புயலுக்குப்பின் புயலை சந்திக்கிற பட்சத்தில் அதிகமான மன்றாட்டு அவசியப்படுகிறது. சபையின் தாழ்மைக்கு தீர்க்கமான ஜெபம் காண்பிக்கப்படவேண்டும்.மேலும் ஆண்டவருடைய சித்தத்தை அறிந்து நமது ஜீவியமும் செயல்பாடுகளும் தேவ அறிவிற்கு ஒருசேர இணங்கிவரவேண்டும். நாம் ஜெபிக்கும்போது தேவன் தாமே நமது தேசத்திற்கும் சமுதாயத்திற்கும் நித்தியமான நன்மைகளை கொண்டு வரவேண்டும்.

தேசத்தில் தேவனுடைய இடைபடுதலுக்காக ஜெபிக்கிற அதே வேளையில் கிறிஸ்துவின் சபை கட்டப்படவேண்டியதும் அவசியமாயிருக்கிறது.இவை இரண்டும் ஒன்றுக்கொன்று மேன்மைபட்டதல்ல. தேசத்திற்காக சபை ஜெபிப்பது என்பது ஒரு முன்னறிந்த காரியம். உண்மையுடன் ஜெபிக்கும் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். எதிர்ப்பின் மத்தியில் ஜெபிக்கும்போது அது வலிமையான ஒரு சபை என்பதை வெளிப்படுத்துகிறது. பகுத்தறிந்து ஜெபிப்பதற்கு ஆண்டவருடைய ஆவிக்கு நம்மை ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும்.

இந்நிலை நீடித்திருக்க சபை கொண்டிருக்க வேண்டியவை என்ன? வாஸ்தவத்தில் ஒரு வலிமையான தேசிய திருச்சபை அவசியம். அதென்னவெனில் சபைகள் தேறினவையாகவும் சபையில் உள்ளவர்கள் சீஷராக்கப்பட்டு ஆவிக்குரியவர்களாக வியாபித்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமது சாட்சிகள் அதிரவைப்பவையாகவும் நமது சான்றுகள் சமுதாயத்திலும் தேசத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துபவையாகவும் காணப்படும்.

இந்தக் கையேட்டில் கிறிஸ்துவின் சரீர ஒற்றுமையில் சில முக்கிய தலைப்புகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மலேசியா அதிகமான சவால்களை எதிர்நோக்கியிருக்கும்போது, சரீரத்திலும் அதிக ஒருமைப்பாடு இருக்கவேண்டும்.இவ்வித ஒற்றுமையில்தான் சோதனை மற்றும் உபத்திரவத்திலும் வலிமையாக நிலை நிற்கமுடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷங்களில் கூறியிருக்கிறபடி, தேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்போதுதான் சத்தியத்திலும் நீதியிலும் நியாயங்களிலும் திருச்சபையானது தேசத்தை ஒழுங்கு படுத்த இயலும்.

நமது இடைவிடா மற்றும் தொடர்ச்சியான ஜெப வாழ்க்கையை பலத்துடனும் உந்துதலுடனும் தீர்மானிக்க இந்தக் கையேடு உதவும் என்று நம்புகிறோம். இன்னும் முக்கியமாக நமது ஆவிக்குரிய தன்மையை மறுபடியும் ஆழமாக பதிய வைத்து ஒளியின் முகவர்களாகவும் தேவ இராஜ்ஜியத்தின் மூலம் சமூகத்திலும், சமுதாயத்திலும் தேசத்திலும் உருமாற்றத்தைக் கொண்டு வருகிறதற்கு உதவும் வகையில் இருக்க நாம் ஜெபிக்கிறோம்.

தேவன் தாமே திருச்சபையையும் தேசத்தையும் ஆசீர்வதிப்பாராக.

இயூஜின் யாப்
பொதுச்செயலாளர்
**என்.இ.சி.எ• மலேசியா**

நாள்1/ஆகஸ்ட் 7:
வாரம் 1 : மணவாட்டியாகிய என் திருச்சபை

# “இயேசு பெருகவும் நான் சிறுகவும்“

திருச்சபையை வருணிக்க புதிய ஏற்பாடு சில உருவகங்களைப் பயன்படுத்துகிறது. பவுலின் ஒரு வருணனை யாதெனில் ‘கிறிஸ்துவின் சரீரம்’(1 கொரி 12). இயேசுவின்(திருச்சபை) சீடர்களை கிறிஸ்துவின் மணவாட்டி எனவும் இயேசுவை மணவாளன் எனவு**ம் யோவான் ஸ்நானகன்குறிப்பிட்டுள்ளார் (யோவான்3)**.

மணவாளனுடைய தோழன் என தம்மை அழைத்து இயேசுவையே வெளிச்சம் போட்டு காண்பிக்கிறதை யோவான் ஸ்நானகனில் காண்கிறோம். இயேசு பிரசித்தியடைகிறதால் யோவான் விசனப்படவில்லை (யோவான் 3:26). மாறாக மணவாளனை சார்ந்து மணவாட்டி செல்கிறதை கண்டு பெரிதும் மனமகிழ்கிறார் (யோவான் 3:29). தம் கூட்டத்தாரை இயேசுவிடம் இறுதியில் இழந்தவர் என யோவானைப்பற்றி ஜே. ஆஸ்வால்ட் சேண்டெர்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்.

இயேசுவை உயர்த்துகிறதையே முதன்மையாகக் கொண்டிருந்தார் யோவான் (யோவான்3:30). ‘அவர் பெருகவும் நான் சிறுகவும்’. தேவனுடைய இராஜ்ஜியத்தில் மிகவும் பெரியவர் என யோவானின் தாழ்மையை இயேசு பாராட்டுகிறார் (மத் 11:11). அதுபோல மலேசியாவின் மணவாட்டிகள் யோவானின் தாழ்மையை பின்பற்றி இயேசுவை எந்நாளும் உயர்த்த வேண்டும். இயேசுவையா அல்லது நம்மையே புகழுச்சிக்கு கொண்டு செல்லுகிறோமா?

## ஜெப குறிப்புகள்

1. மலேசியாவிலும் உலகலாவிய நிலைகளிலும் சபை வளர்ச்சி காண கரிசனை.
2. இப்புவியில் தேவ இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்க சபைகளுக்குள் நெருங்கிய ஒத்துழைப்பிற்காக
3. கிறிஸ்துவில் விசுவாசிகள் யோவான் 3:30ஐ வாழ்க்கையின் குறிக்கோளாக பற்றிக்கொள்ள

# கிறிஸ்துவிடம் சங்கமும் ஐக்கியமும்

எபேசியர் 5ல் சபையை கிறிஸ்துவின் மணவாட்டி என வருணித்து, இயேசுவின் தியாகமுள்ள அன்பை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவுக்கும் திருச்சபைக்கும் மனித விவாக உறவை தொடர்பு படுத்தி ஒரே மாம்சம் எனும் கருத்தை பவுல் வெளிக்கொணருகிறார். ஆவிக்குரிய ரீதியில் இயேசுவுக்கும் (வ 31:32) திருச்சபைக்கும் உள்ள உறவு வெளிப்படுகிறது.

மனித புத்திக்கு அப்பாற்பட்ட இரகசியமாக இந்த உறவை பவுல் ஆழப்படுத்துகிறார் (வ32). இந்த இரகசியம் இயேசுவை விட்டு விலக்கவோ அல்லது அவருடனான மெய்யின்ப ஆவிக்குரிய சங்கமத்தையும் ஐக்கியத்தையும் தடுக்கவோ கூடாது.

தமஸ்கு சாலையில் பவுலும் அவரை பின்பற்றினவர்களும் ஒரு இரகசிய சங்கமத்தை சிறிதளவு அனுபவித்தார்கள். அப் 9:4ல் உயித்தெழுந்த இயேசு பவுலுக்கு தரிசனமான போது, சவுலே, சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?" எனகேட்டார். அதில் ஆழமான ஓர் உணர்வையும் ஆவிக்குரிய சங்கமத்தையும் அவர்கள் அறிந்தார்கள்.

இந்த இரகசிய மற்றும் மெய்யின்ப சங்கமத்தை கிறிஸ்துவின் மணவாட்டி முன் ருசித்திருந்தாலும் ஆவிக்குரிய மெய்யின்பத்தின் நிறைவு காத்திருக்கிறது. அது ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்காக வைக்கப்பட்டிருக்கிறது. எதிர்வரும் இந்த அனுபவம் மணவாளனாகிய கிறிஸ்துவின் வருகையில் களிப்பாக்கும்.

### ஜெப குறிப்புகள்

1. மணவாளனுடைய இந்த தியாக அன்பிற்காக துதி, நன்றியறிதலுடன் ஜெபி.
2. தனிப்பட்ட ரீதியில் இந்த மெய்யின்ப சங்கமம் மற்றும் ஐக்கியம் வளர ஜெபி.
3. தொடர் மகிழ்ச்சியின் ஆவிக்குரிய இந்த மெய்யின்பம் பரலோகத்தில் நிறைவேற ஜெபி.

# இரண்டாம் வருகைக்கு மணவாட்டியின் ஆயத்தம்.

1. நாள் 3/ஆகஸ்ட் 9: இரண்டாம் வருகைக்கு மணவாட்டியின் ஆயத்தம்.

2. கிறிஸ்துவின் மணவாட்டிக்கு பத்து கன்னிகைகள் குறித்த உவமை ஏற்றதன்று என சில போதகர்கள் போதிக்கின்றனர்(மத் 25).காரணம் 10 மணவாட்டிகளோடு முடிந்து விடுகிறது எனும்தவறான கருத்து. ஆவிக்குரிய உதாரணத்தை தொடர்புபடுத்துவதேயன்றி உண்மை நிலை அதுவல்ல. 10 கன்னிகைகள் 10 மணவாட்டிகள் மாத்திரம் எனும் பொருள்படாது, மாறாக திருமண விருந்திற்காக நடத்தப்படும் மணப்பெண்ணின் ஆயத்தம் என்று குறிக்கின்றது.

3. எனினும் இந்த உவமையைக்கொண்டு பூமியின் திருச்சபையை ஆவிக்குரிய மணவாட்டியாக இயேசு குறிப்பிடுகின்றார். இரண்டாம் வருகைக்கு ஆயத்தம் பண்ண வேண்டிய கலியாண ஆயத்தங்களின் முக்கியத்துவத்தை இயேசு நினைவு படுத்துகிறார். எனவே மணவாளனின் திடீர் வருகைக்கு 5 கன்னிகைகள் ஆயத்தமாகவும் 5 கன்னிகைகள் அதில் தோல்வியுற்றவர்களாகவும் காணப்படுகின்றனர்.

4. மணவாளனின் வருகை தாமதித்தாலும் மணவாட்டிகளுடைய ஆயத்தம் குறையக்கூடாது. அல்லது தாமத வருகையால் கிறிஸ்துவின் மணவாட்டியின் மனப்பாங்கில் மந்தம் ஏற்படலாகாது. இராஜ்ஜியத்தில் தீவிரமாக இருக்க வேண்டிய நிலை மாறி தூங்குபவர்களாக சபைகள் காணப்படும் சாத்தியம் ஏற்படும். இந்த ஆவிக்குரிய பரிதாபத்தைத் தவிர்க்க ஆண்டவர் இந்த புவிக்கு திரும்பி வரும்போது திருச்சபை முழுமையான ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

## ஜெப குறிப்புகள்

1. பரலோக மணவாளன் திரும்பி வரும்போது கிறிஸ்துவின் மணவாட்டி முன்னேற்பாடான ஆயத்தத்தில் காணப்படவேண்டும்.
2. இவ்வுலகில் தேவ ஜனங்கள் பரிசுத்தமும் மாசற்ற ஜீவியமும் ஜீவிக்க வேண்டும்.
3. இரண்டாம் வருகையின் முக்கியத்துவத்தை உணர்ந்து சுவிசேஷம் மற்றும் அருட்பணியில் தீவிரம் காட்ட வேண்டும்.

நாள் 4/ஆகஸ்ட் 10:

வாரம் 1 : மணவாட்டியாகிய என் திருச்சபை

# கிறிஸ்துவுக்கு தூய்மையான ஒப்புக்கொடுத்தல்

திருச்சபையானது கிறிஸ்துவின் மணவாட்டியாக இருக்க வேண்டிய அவசியத்தை 2 கொரி 11:2ல் விளக்குகிறது. கொரிந்து சபை விசுவாசிகளை ஒரு புருஷனுக்கு ஆவிக்குரிய விதத்தில் நியமிக்கப்பட்டபடியால் தெய்வீக எரிச்சலோடு பேசுகிறார்.

மணவாட்டியாகிய கொரிந்து சபை தனது ஆவிக்குரிய புருஷனுக்கு தனது உத்தமத்தை காண்பிக்க வேண்டியதாய் இருந்தது (வச3). இதனை ஒரு விவரிப்பின் மூலம் காண்போம். மத்தேயு 1ல் தனக்கு நியமிக்கப்பட்ட ஸ்திரீயான மரியாள் தான் கூடி வருமுன்னே கர்ப்பவதியானதை அறிந்த யோசேப்பு மிகவும் குழம்பி கலக்கமடைந்தான். அவளைக் கல்லெறிந்து கொல்லாதபடிக்கு, கருணையின்படி அவளைத் தள்ளிவிட முடிவெடுத்தான். திருமணத்திற்கு முன் மரியாள் தனக்கு கற்புள்ளவளாகவும் உத்தமமாகவும் நடப்பாள் என எதிர்பார்த்தான். எனினும் மரியாள் கர்ப்பவதியானது, பரிசுத்த ஆவியின் உன்னத நிழலினால் என்று ஒரு தூதன் மூலம் யோசேப்புக்கு வெளிப்படுத்தவேண்டியிருந்தது (மத்1:20)

யோசேப்பின் பார்வையில் மரியாளின் களங்கம் எனும் கணிப்பு அவனை எந்த அளவிற்கு பாதித்திருக்கிறது. ஆவிக்குரிய விதத்தில் தமது திருச்சபையின் நேர்மையற்ற நடக்கையினால் எந்த அளவு இயேசு வேதனைப்பட்டிருப்பார்? தமது மணவாட்டியை தமக்கென மீட்கும்பொருட்டு, இயேசு சிலுவையில் பாடுபட்டு மரிக்கவில்லையா?

## ஜெப குறிப்புகள்

1. உபத்திரவங்களின் மத்தியிலும் கிறிஸ்துவின் மணவாட்டி தமது ஆண்டவராகிய இயேசுவுக்கு உத்தமமாக நடக்க ஜெபி.
2. தமது ஆவிக்குரிய மணவாட்டியாகிய சபையை மீட்க விலைக்கிரயத்தை கொடுத்த அவரின் உன்னத ஆழத்தை ஆய்ந்து பார்க்க
3. உலக சம்பத்து மற்றும் தற்புகழுக்காக நாடுவதை விடுத்து தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவரின் நீதியையும் தேடும் வாஞ்சையைப் பெற.

நாள் 5/ஆகஸ்ட் 11
வாரம் 2 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# ஒன்றிணைப்பு சோதிக்கப்படும்

ஆதி 22:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார்

தேவனுடனான ஆபிரகாமின் நட்பு வெகுவாக சோதிக்கப்பட்டது.மோரியா மலையில் அவனுடைய ஒரே நேச மகனாகிய ஈசாக்கை தகனபலியாக ஒப்புக்கொடுக்கப்பட கேட்டுக் கொள்ளப்பட்டான்.ஆதி 17:2-8 வரையிலான வாக்கு தனது நம்பிக்கைக்கு அடிப்படையாக இருந்தது. மரண விளிம்பில் தன் மகனை வெட்ட கத்தியை ஓங்கும் வரை அவனுடைய விசுவாசம் சோதிக்கப்பட்டது.

தேவனுடனான நமது உறவு மரண விளிம்பு வரை சோதிக்கப்பட்டுள்ளதா? நமது ஜீவியத்தில் ஏற்படும் சோதனைகளுக்கும் பரீட்சைகளுக்கும் நாம் வழங்குகிற மறுமொழியே அந்த ஒன்றிணைந்த உறவின் அளவாக கணிக்கப்படுகின்றது. இடறல்கள் வேளையின்போது, நமது விசுவாச நடவடிக்கையின் அடிப்படை கிறிஸ்துவின் அன்பில் நமது தனிப்பட்ட அனுபவத்தை விவரிக்கின்றது.

சோதனைகளை விடாமுயற்சியுடன் சகிப்பவன் அதில் ஜெயங்கொண்டபின் ஜீவ கிரீடத்தை பெறுவான் எனும் வாக்குத்தத்தம் அவரை நேசிக்கிறவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதம் (யாக் 1:12). அதுபோல சிக்கலான சோதனையின் மத்தியில் ஆபிரகாம் கீழ்ப்படிந்தபடியினால் அளவுக்கதிகமான ஆசீர்வாதம் அவன் சந்ததிக்கும் தேசத்திற்கும் இந்த பூமிக்கும் கிடைக்கப்பட்டது.

### ஜெப குறிப்புகள்

1. தியானம் - கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட.
2. நன்றி செலுத்து - எல்லா சூழ்நிலைகளிலும் நன்மையையும் தீமையையும் ஏற்றுக்கொள்ளச்செய்யும் தேவனுக்கு
3. கேள் -சோதனைகள் பரீட்சைகள் மத்தியில் பாவஞ்செய்யாமலும் தேவனைப்பற்றிக் குறைசொல்லாமலும் இருக்க கிருபையும் பலத்தையும் அளிக்க (யோபு 1:22).ஜெயங்கொள்ளும் வெற்றியாளர்களாக மாற.

நாள் 6/ஆகஸ்ட் 12

வாரம் 2 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# ஆழ் உறவிற்கு முதன்மைப்படுத்துதல் தேவை

லூக்கா 10:42 மரியாள் நலமானதைத் தெரிந்துகொண்டாள்

மரியாளும் மார்த்தாளும் ஆண்டவராகிய இயேசுவை நேசித்த இரண்டு சகோதரிகள்.தேவனுடனான ஈடுபாட்டில் எப்படிமுதன்மைப்படுத்துவது என்று நமக்குக் காண்பிக்கின்றனர்.

மார்த்தாள் தன்னுடைய வீட்டிற்கு வருகிற இயேசுவை ஏற்று உபசரிக்கிறதின் வழி அவரைக் கனப்படுத்துகிறாள். வசனம் 40ல் தான் செய்கிற பற்பல ஆயத்த பணிகளில் வருத்தமடைகிறாள்.வேலைப்பளுவினால் அழுத்தங்களுக்கு ஆளாகிற அவள் அச்சூழ்நிலையில் இயேசு கையாளுகிற முறை குறித்து ஏமாற்றமடைகிறாள்.வசனம் 2ல் தேவையானது ஒன்றே என இயேசு குறிப்பிடுகிறாள். அவளுடைய முக்கியத்துவம் தவறு என்று இயேசு சுட்டிக்காண்பிக்கிறார்.உபசரிப்புப் பணியில் அவ்வளவாக ஈடுபடாத மரியாள் நலமானதைத் தெரிந்து கொள்கிறாள். வசனம் 39ல் அவள் இயேசுவின் பாதத்தில் அமர்ந்து எல்லா கவனத்தைம் முக்கியத்துவத்தையும் அவரிடமாகத் திருப்புகிறாள்.

ஆண்டவருடனான ஆழ் உறவிற்குள் செல்வதற்கு நாம் நமது முகாமைகளை மறுஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது.ஜீவ வார்த்தைகளான வேதத்தை வாசிப்பது நம் வாழ்க்கையின் முதன்மை நடவடிக்கையாக இருக்கிறதா?விளையாட்டுத்துறையிலும் கடைவீதிகளிலும் செலவிடுகிற நேரத்தைவிட வேதம் வாசிப்பதிலும் ஜெபம் செய்வதிலும் கழிக்கிறோமா?

### ஜெப குறிப்புகள்

1. தியானி – மத்தேயு 11:28 வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்.நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
2. நன்றிசெலுத்து – என்னிடத்தில் வந்து கற்றுக்கொள்ளுங்கள் எனும் அவரது அழைப்பிற்கு
3. கேள் – அவருடைய பிரசன்னத்தில் வந்து ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் பெற்றுக்கொள்ளுங்கள்.நமது இருதயத்தையும் சிந்தைகளையும் தாழ்த்தி அவரிடத்திலிருந்து கற்றுக்கொள்வோம் ஏனெனில் அவரது நுகம் மெதுவாயும் அவரது சுமை இலகுவாயும் இருக்கும்.

# ஆழ் உறவு கிறிஸ்துவின் தன்மைகளை பிரதிபலிக்கும்

இந்த உவமையில் தான் திராட்சைச்செடியும் நாம் கொடியுமாக இருக்கும் ஓர் அழகிய எடுத்துக்காட்டைக் கிறிஸ்து கூறுகிறார்.ஒருவன் என்னிலும்(கிறிஸ்து) நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; அண்ட்ரூ முர்ரே என்பவர் கொடிகள் என்பது திராட்சையின் ஒத்த தோற்றத்தில் இருக்கிறது என்று சொல்கிறார். வேறுபாடு என்னவெனில் திராட்சையானது மகத்தானதும், வலிமையானது பலமானதுமாக காணப்படுகிறது; கொடியானது சிறியதும் மெலிசுமாயிருந்து எப்பொழுதும் பலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுமாயிருக்கிறது. கிளைகள் தானாக கனிகளைக் கொடுக்க இயலாது காரணம் செடியிலிருந்துதான் அதின் வளர்ச்சிக்கு ஏதுவானவைகளைப் பெற்றுக்கொள்கின்றது.செடியானது கிளைகளுக்கு வேண்டிய உயிர்ச்சாறு, ஊக்கம் மற்றும் பலத்தை வழங்குகிறது.செடி அளிக்கிறவற்றைத்தவிர கிளைகளுக்கு ஒன்றுமில்லை.எனவே, கிறிஸ்து இல்லாமல் நாம் ஒன்றும் செய்யமுடியாது.

கிறிஸ்துவுடனான ஆழ் உறவு அவரைப்போன்றும் அவரின் இயற்தன்மையிலும் செயல்படவேண்டும். நாம் நம்முடைய ஜீவியத்தை அவருடைய நோக்கத்திற்கு நேராக திருப்புவோமானால் கிறிஸ்து வாஞ்சிக்கிற மிகுந்த கனிகளை இயற்கையாகவே நாம் ஈய முடியும்.

நமது அனுதின நடக்கையில் கிறிஸ்துவைப்போல் நிலைத்திருப்பது என்பது ஒரு சவாலான காரியம்.கிறிஸ்துவை முற்றிலும் சாராமலிருந்தால் தாழ்மை, உபசரிப்பு, அன்பு போன்ற கிறிஸ்துவின் கனிகளை நாம் கொடுக்கமுடியாது.

### ஜெப குறிப்புகள்

1. தியானி – வசனம் 1ல் கிறிஸ்துவே உண்மையான திராட்சை செடி; நமது பரமபிதா திராட்சை தோட்டக்காரர்.கிளைகளாகிய நாம் வளர்ந்து கனிகள் கொடுக்கும்ப டி நமது சகல தேவைகளையும் பூர்த்தி செய்கிற தேவனுடைய கரங்களில் இருக்கிறோம் என்பதை உறுதியாய் நம்பவேண்டும்.
2. நன்றிசெலுத்து – வாழ்க்கையின் புயல்கள் மத்தியிலும் கூட நாம் கிறிஸ்துவின் தொடர்ச்சியான பலத்திலும் வழிநடத்துதலிலும் நிலைத்திருக்கிறதற்காக
3. கேள்–திராட்சை செடியான கிறிஸ்துவின் ஐக்கியத்தில் காணப்படும் இரகசியங்களை தேவன் தொடர்ச்சியாக நமக்கு வெளிப்படுத்தி நாம் கனி ஈயும்படியாக கிறிஸ்து நமக்கு அருளும்படி

# வார்த்தையில் ஆழ் உறவு

கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பது என்பது அவருடைய வார்த்தை நமக்குள் நிலைத்திருப்பது என்று அர்த்தம் என மெர்ரில் சி டென்னி என்பவர் விவரிக்கின்றார்.அதாவது அவருடைய வார்த்தையின் அதிகாரத்துடன் ஜெபத்தில் அவருடன் தொடர்ச்சியான தொடர்பை கொண்டிருப்பது.அப்படி அவருடைய சீடர்கள் கிறிஸ்துவிடம் அவ்வித வார்த்தையின் உறவிற்குள் இருக்கும்போது ஆண்டவருடைய இருதயத்திற்கு நெருங்கிய காரியங்களைக் கேட்பார்கள்.அதினால் வசனம் 7ன் வாக்குப்படி அப்படிப்பட்ட ஜெபங்கள் கேட்கப்பட்டு கனிகொடுக்கிற, பரம பிதாவிற்கு மகிமையைக்கொண்டுவரும் சீடர்களாக அடையாளம் காணப்படுவர்.

கீழ்ப்படிதல் மற்றும் மகிழ்ச்சி ஆகிய இரண்டும் அதின் பலன்கள் என டென்னி விவரிக்கின்றார். இயேசுவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிதல் என்பது அவரில் நம்முடைய அன்பை புலப்படுத்துகின்றது.மேலும் கிறிஸ்துவுக்குள் நமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்.தேவனுடைய நோக்கத்தை கீழ்ப்படிதலின் மூலம் நிறைவேற்றும்போது ஜெயத்தைக்கொண்டு வரும்.நமக்குள் கிறிஸ்துவின் ஜீவியம் காணும்பொழுது பலனையும் இயற்தன்மையிலான களிப்பையும் கொண்டு வரும்.அவருடன் எஞ்சியுள்ள நாட்கள் சுமையுள்ளதாகவோ அல்லது சலிப்பாகவோ இராது.

### ஜெப குறிப்புகள்

1. தியானி – யோசுவா 1:8, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்.
2. நன்றிசெலுத்து – நீதியின் பா தையில் நடத்துவதற்கு அவருடைய வார்த்தை எப்பொழுதும் வழிகாட்டியாயிருக்கிறது.
3. கேள்–அவரில் எப்பொழுதும் சார்ந்திருந்து கனி ஈயும் மன்றாட்டாளர்களாக இருக்க தேவனுடைய உதவி.

நாள் 9/ஆகஸ்ட் 15

வாரம் 2 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# பரிசுத்த ஆவியின் மூலம் ஆழ் உறவு

யோவான் 14:15&16 - நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

அப்பொழுது வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

பரம பிதாவிடத்திற்கு திரும்புமுன் கிறிஸ்து பரிசுத்த ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அனுப்ப வாக்குக்கொடுத்தார்.பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மை வழிநடத்துவார்.இதன் தொடர்பாக உண்மையாக அவரில் அன்பு கூறுகிறவர்கள் அவரின் கட்டளைகளை பின்பற்ற வேண்டும்.வசனம் 23ல் ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான் என்று மறுபடியும் கூறுகிறார்.இந்த கட்டளையை பின்பற்ற தமது விசுவாசிகளுக்கு அவருடைய உதவி தேவை என அறிந்திருந்தார். இவ்வித நிறைவேற்றம் கிறிஸ்துவுக்குள் உள்ள ஏவுதலினால் உந்தப்படவேண்டுமே தவிர கட்டாயத்தினால் அல்ல. எனவே பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் நமக்குப் போதித்து, கிறிஸ்து போதித்த எல்லாவற்றையும் நமக்கு நினைப்பூட்டுவார்.வசனம் 26.

கிறிஸ்துவுடன் இந்த ஆழ் உறவில் வளர வேண்டிய நாம் பரிசுத்த ஆவியானவர் எப்படி நம்மில் அனுதினமும் நம்மை வழிநடத்த அனுமதிக்க வேண்டும் என அறிந்திருக்க வேண்டும்.

பூமியில் இருந்த போது இயேசு ஆற்றிய பல்வேறு செயல்களை விசுவாசிகளுக்கு தேவனுடைய பிரதிநிதியாக இருந்து காண்பிக்கும் பணியை பரிசுத்த ஆவியானவர் செய்கிறார்.நமக்குள் அவர் வாசம்பண்ணுவது என்பது கிறிஸ்துவின் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட சிலாக்கியமாகும்.

### ஜெப குறிப்புகள்

1. தியானி – நமக்குள்ளிருந்து ஜீவ ஊற்று எப்படி புறப்பட்டு வருகிறது (யோவான் 7:38).
2. நன்றிசெலுத்து- கிறிஸ்துவுக்குள் ஆழ் உறவை ஏற்படுத்திக்கொள்ளும்படி நமக்குள் வாசம்பண்ணி நமக்கு உதவியும் ஆலோசனைகளையும் நல்கும் பரிசுத்த ஆவியானவரைத் தந்த இயேசுவுக்கே
3. கேள்–ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுடனும் நமது பரம பிதாவுடனும் நமது உறவு இன்னும் ஆழமாக இருக்கும்படி நம்மை வழிநடத்தும் சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவியிடம்.

நாள் 10/ஆகஸ்ட் 16

வாரம் 2 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# பலவீனத்தின் வழி ஆழ் உறவு

லூக்கா 15:20. அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்.

ஒவ்வொரு விசுவாசியும் இந்த கிருபையை எதிர்நோக்குவர்: இருள் நிறைந்த பாவ விருப்பங்களை எதிர்நோக்கும்போது நமது உடைந்த நிலையை மாற்ற நம்மைப் பின் தொடருகிறார். கிறிஸ்துவின் மூலமாக நீதிமான்களாக்கப்பட்டபடியினால் அவர் நம்மை அழகானவர்கள் என்று அழைக்கிறார் (2 கொரி 5:17-21) ஏனெனில் நமது உள்ளத்தில் "ஆம்" என்று உண்மையாய் சொல்லி (சங் 51:12, மத்தேயு 26:41) இயேசுவின் மணவாட்டியாக நித்திய அழைப்பின் வழி நம்மைக் கண்டு (எபேசியர் 4:11-13, 5:24-25) தகப்பன் .. ஓடி..கட்டிக்கொண்டு முத்தஞ்செய்ததுபோல தேவன் தம்முடைய முயற்சியைக் கைவிடாமல் பலவீனர்களானபோதும் தமது விசுவாசிகளை நேசித்து அவர்களை பூரணப்படுத்தும் உறுதிப்பாட்டில் தளரவேயில்லை. கிறிஸ்துவுடன் ஆழ் உறவில் வாழும் வாழ்வுக்கு அவருடைய மேய்ச்சலில் தயக்கமின்றி ஜீவிக்க அவருடைய கண்களின் வழியாய் காண்பது அவசியமாகிறது.

### ஜெப குறிப்புகள்

1. தியானி –கிறிஸ்துவுக்குள் நாம் யார் எனறு வேதம் கூறுகிறதை (2 கொரி 5:17; எபேசியர் 2:10; யோவான் 1:12; 1 பேதுரு 2:9)
2. நன்றிசெலுத்து–நமது உடைந்த நிலையிலும் அவர் பிரியப்படுகிறார். நமது பலவீனத்தை அவர் அசட்டை பண்ணாமல் சரியாக அவரை நேசிக்க நம்மை பலப்படுத்துகிறபடியால்
3. கேள் - நமது இருதயத்தின் இருண்ட பகுதியில் தமது வெளிச்சத்தினால் நிரப்ப. வெளிச்சத்தில் ஜீவிக்கும்போது தேவனுடன் ஐக்கியம் கொண்டு அவருடன் ஆழ் உறவில் வளர (யோவான் 3:17-19, 1 யோவான் 1:5-10). நம்மை எவ்விதம் பரம பிதா காண்கிறாரோ அப்படியே நம்மை கண்டு நாம் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும்.அப்பொழுதுதான் நாம் தைரியமாய் அவரை அணுகி அவருக்கு முன்பாக அனுதினமும் அன்பில் வளர முடியும்.

# கிறிஸ்துவுடனான நமது ஆழ் உறவிற்கு என்ன தடைகள்

மத்தேயு 13:22 முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப்போவான்.

உன்னதபாட்டு 2:15 திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே.

குள்ள நரிகள் தந்திரம் நிறைந்ததாய் இரவில் திராட்சை தோட்டத்தை கெடுத்துப் போடுகிறது.பகலில் தாக்குதல் நடத்தும் துணிவும் பலமும் நிறைந்த சிங்கத்தைப்போல் அல்லாமல் குள்ளநரிகள் சிறியதும், வேகமாயும் பிடிக்க கடினமாகவும் காணப்படும். இந்த குள்ள நரிகள் நமது திராட்சை தோட்டமாகிய இருதயத்தில் சிறிய அளவிலான ஒத்த வேஷம், ஐயப்பாடு, வார்த்தையிலும் மனப்பாங்கிலும் பாவ எண்ணங்கள், நமது நேரத்தையும் பணத்தையும் விரயமாக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்படும் விதைகளைப்போல இந்த உலகக்கவலை மயக்கங்கள் நம்மை கனிகொடுப்பதிலிருந்து தடை பண்ணுகின்றன.குழிநரிகளையும் சிறுநரிகளையும் நமக்குப் பிடியுங்கள் எனும் கூக்குரல் தேவனை முழு அளவில் நேசிப்பதற்கு தடை பண்ணுபவற்றை அகற்றுங்கள் எனும் அவருடைய கூக்குரலாக இருக்கின்றது.

### ஜெப குறிப்புகள்

1. தியானி –நமது பலவீனங்களில் உதவி செய்ய தேவ ஒத்தாசைக்காக (ரோமர் 8:26-27; எபிரெயர் 4:14-16; யூதா 1:24)
2. நன்றிசெலுத்து–எந்த ஒரு தடையும் நீக்கி, நம்மை அன்பில் முன் நடத்த அவருடைய இரக்கத்திற்காக
3. கேள் –அவருடனான உறவிற்கு தடைகளாக காணப்படுகிற பகுதிகளை வெளிப்படுத்த (சங் 139:23-24).அழ் உறவிற்கு கொண்டு செல்ல தடைகளாக இருப்பவற்றை அகற்ற அவரை அழைக்கவும் அவருடன் பங்காளர்களாகும்படி எழும்பும் கிருபையை அருள.

நாள் 12/ஆகஸ்ட் 18

வாரம் 3 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# கிறிஸ்துவின் சரீரத்தில் ஒன்றாயிருப்பது

யோவான் 17ல் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒன்றாயிருக்க வேண்டிய சத்தியத்தை இயேசுவே காண்பித்திருக்கிறார்.அதுதான் கெத்சமனே தோட்டத்தில் இயேசு செய்த பிரதான ஆசாரியர் விண்ணப்ப ஜெபம்.

இயேசுவினுடைய சிலுவை மரணத்திற்கு முன்பாக இந்த ஜெபம் செய்யப்பட்டதற்கு இதை விட வேறு சிறந்த ஸ்தலம் இருந்திருக்க முடியாது. யோவான் 17:6-19ல் பிதாவினிடத்தில் தம் சீஷர்களுக்கும் நமக்கும், பிறகு வசனம் 20-26 வரை சீடர்களும் சபையும் கடைபிடிக்க வேண்டிய வார்த்தைகளை விவரித்திருக்கிறார். 20 வசனங்களில் இயேசு பிதாவாகிய தேவனிடம் கோரிய வாக்குத்தத்தங்கள் அடங்கிய தயாள விண்ணப்பங்களாகும்.குறிப்பிட்டுச்சொல்லப்போனால் ஒன்றாயிருப்பதைக்குறித்த ஆவிக்குரிய டி.என்.ஏ.வாக அது இருந்தது அதாவது அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும் (வசனம் 21).நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்று மேலும் ஜெபிக்கிறார்.இதற்கு முன்பு உள்ள 3 அதிகாரங்களில் இந்த பரிசுத்த ஒற்றுமை திரித்துவ தேவனில் வெளிப்பட்டு நமக்கு போதனையாக அமைந்ததையும் பார்க்கிறோம்.

இத்தகைய ஒன்றிணைப்பை பகிர்ந்துகொள்கிற நாம் ஒருவரிலொருவரான உறவை ஸ்தாபிக்கிற நமது இயேசு மத்தேயு 16:18ன்படி பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை என்று சொல்லாமல் இருப்பாரோ?

### ஜெப குறிப்புகள்

1. பிரதான ஆசாரியரின் விண்ணப்பமாகிய ஒன்றாயிருப்பதை நிறைவேற்றுவதற்கு நமக்காகவும், கிறிஸ்துவின் சீடர்களுக்கும் திருச்சபைக்கும் ஜெபிப்போமாக
2. இயேசுவை நமது பரமபிதா அனுப்பினார் என்பதை இந்த உலகம் அறிந்து கொள்ளும்பொருட்டு ஒன்றாயிருக்கும்படியான இந்த டி.என்.ஏ.வை நினைவுகூர்ந்து தொடருவோமாக.

நாள் 13/ஆகஸ்ட் 19
வாரம் 3 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# ஒன்றாயிருப்பதற்கு முக்கியமான தகுதிகள்.

அடுத்த பரிசுத்த அதிகாரத்திற்கான பாடம் புறஜாதியாருக்கான அப்போஸ்தலருடைய ஒற்றுமை – பரிசுத்த பவுல்.

நமது குணாதிசயம் மற்றும் நடத்தையைச் சார்ந்ததுதான் சபையின் ஒருமைப்பாடு (எபேசியர் 4:2). நஸ்டொட் அதிக வடிமைப்புகளுடன் கூடிய துவக்கத்தைப் பற்றி குறிப்பிடுகிறார்.பவுல் நன்னெறி தகுதிகளைப்பற்றி துவங்குகிறார். ஐந்து நன்னெறி தகுதிகள் உண்டு.

1. தாழ்மை. பண்டைய காலங்களில் அடிமைத்தனமாக நினைக்கப்பட்டது. இங்கே சேவகனாக ஆகும்படி தன்னைத் தாழ்த்தின கிறிஸ்துவின் சிந்தையை இது சித்தரிக்கிறது (பிலிப்பியர் 2:3-8)

2. சாந்தம் ; வளர்ப்பு மிருகங்களுக்கு இது ஒப்பிடப்படுகிறது. இது பலவீனம் என்பதல்ல ஆனால் ஒருவருடைய பலம் ஆளுகைக்குட்பட்டிருப்பினும் தனிப்பட்ட உரிமைகளை இழக்காது காத்துக்கொள்ளுதல். கிறிஸ்துவுக்குள் இவை இரண்டும் சமனான தன்மையைக்கொண்டிருக்கின்றன. (மத்தேயு 11:29).

3. பொறுமை மற்றும் (4) பரஸ்பர உணர்வுடன் சகித்தல். இவை இரண்டும் இயற்கையாகவே இணைந்து செல்லும். பொறுமையானது திமிறி நிற்கிறவர்களுக்கு எதிராக காண்பிக்கப்படுவது. எ.கா. கிறிஸ்து மூலமாய் நம்மிடம் தேவன் காட்டிய நீடிய பொறுமை (ரோமர் 2:4; 1 தீமோ 1:16). பரஸ்பர சகிப்புத்தன்மை இல்லாவிடில் மானிட வர்க்கம் சமாதானத்தோடு வாழ முடியாது.

4. அன்பு – இறுதியான தகுதியாய் மேற்சொன்ன நான்கு தன்மைகளையும் அணைத்துக்கொள்வதோடு எல்லா நற்கீர்த்திக்கும் கிரீடமாக திகழ்கிறது. மற்றவர்களின் நலன்களையும் சமுதாயத்தின் நன்மைகள் கருதியும் வெளிப்படுகிறது.

### ஜெப குறிப்புகள்

1. சரீரத்தில் ஒற்றுமைத்தன்மையை உண்மையாய் வாஞ்சிப்போமானால் இந்த ஐந்து முக்கியமான தகுதிகளையும் ஒருங்கே பெற்றிருக்க ஜெபிப்போம்.
2. நமது குறைவுகளுக்காக பிதாவிடம் மன்னிப்பு கேட்போம். அவரைப்போல் தாழ்மை, சாந்தம், பொறுமை, சகிப்புத்தன்மை மற்றும் அன்பு கொண்ட தகுதிகளை நமக்கு கொடுக்க வேண்டுவோம்.

நாள் 14/ஆகஸ்ட் 20
வாரம் 3 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# கிறிஸ்தவ ஒற்றுமை நமது வளர்ச்சியின் முதிர்ச்சியைக் கோருகிறது.

சபையினுடைய குறிக்கோள் வெறும் பரிசுத்தத்தை அடைவது மாத்திரம் அல்ல. முதலாவது எபேசியர் 4:13-14ல் நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக மேலும் அவர்(கிறிஸ்து) அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது. பவுல் இதை முடிக்கும்பொழுது அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறது என்கிறார்.

கிறிஸ்தவ ஒற்றுமையானது கிறிஸ்தவ விசுவாசத்திலும் அறிவிலும் சத்தியம் மற்றும் அன்பு இதன் சம அளவைப் பெறாமல் வளராது.அல்லது ஆரோக்கியமான சரீரமில்லாமலும் வளராது. அது கூட்டாக இணைந்து செயல்படுமே தவிர தன்னிச்சையாக அல்ல. ஒருபுறம் ஒற்றுமை அளிக்கப்பட்டு மறுபுறம் அதனைகாத்து வருவது காணக்கூடியதாயிருந்து முழு வளர்ச்சி பெற வேண்டும். ஒற்றுமை தேவனுடைய ஈவாக இருக்கிறது. அது முழு குறிக்கோளாக அடையப்பட வேண்டும்.பரிசுத்த அளவின் படியே ஒற்றுமையின் அளவும் இருக்க வேண்டிய அவசியத்தை ஸ்டொட் கூறுகிறார்.

**ஜெப குறிப்புகள்**

நமது சபைகள், ஸ்தல, தேசிய மற்றும் அனைத்துலக நிலையில் சமுதாய கிறிஸ்தவ தேர்ச்சி அல்லது ஒற்றுமைக்கு வித்திடுவதை ஜெபத்துடன் கடைபிடிக்க கவனம் கொள்.இவற்றில் ஏதாவது ஒன்றை எடுத்து பயன்படுத்த எத்தனித்திருக்கிறோமா அல்லது நமது சொந்த காரியங்களைச் செய்ய கடும் வேலையில் இருக்கிறோமா?

நாள் 15/ஆகஸ்ட் 21
வாரம் 3 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# ஒற்றுமை பணியை ஏதுவாக்குகிறது

தேவன் தமது சுவிசேஷத்தின் வல்லமை வழியாக நம்மை மீட்டு திருச்சபை எனும் சமூகத்தில் சேர்க்கிறார். சபையின் மூலமாக தமது மீட்பின் திட்டத்தை பூமியின் அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்கிறார்.

அதின் பங்கினை நிறைவேற்றுவதற்கு, சபை ஒருமைப்பாட்டில் இருப்பது அவசியம்.ஒற்றுமைக்குலைச்சலைவிட பெரிய ஒரு தீங்கு சபைக்கு வந்துவிடாது.ஒற்றுமையின்மை பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தி அவருடைய ஊழியங்களைப் பாதிக்கின்றது.அது தேவனுக்கு கனயீனத்தைக் கொண்டுவருகிறது.திருத்துவ தேவனின் பரிபூரண ஒற்றுமைக்கு பொய்யான சாட்சியைக் கொண்டு வருகிறது.தேவன் இரக்கமும் அன்பும் நிறைந்தவர் எனும் சபையின் சாட்சியை அதிகாரப்பூர்வமற்றதாக்குகிறது.சபையில் ஊழியம் செய்கிறவர்களை சோர்வடையச் செய்கிறது. விசுவாசிகளையும் தேடி வருகிறவர்களையும் அது துரத்தி விடுகிறது.

மறுபுறம் தேவனுடைய ஜனங்கள் சுபீட்சத்துடனும் சமாதானத்துடனும் ஜீவிப்பார்களேயாகில் அது தேவனைப் பிரியப்படுத்தும்.பரிசுத்த ஆவியானவர் சுயாதீனத்துடன் அசைவாட முடியும்.கிறிஸ்தவர்கள் இயேசு கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்கள் என்பதை உலகம் அறிந்து அநேகர் அவர் பக்கம் திருப்பப்படுவர்.விசுவாசிகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் அற்புதமான சூழ் நிலை ஏற்படும்.தேவ ஊழியர்கள் தங்களது பணிகளை ஒன்றாக்கி தேவ சித்தத்தை செய்ய முடியும்.ஒற்றுமையாய் செயல்படுகிற திருச்சபையில் தேவ நோக்கங்கள் நிறைவேற்றப்பட முடியும்.

### ஜெப குறிப்புகள்

1. மனுஷ குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒற்றுமையைப் போதித்து, கிறிஸ்துவின் பரிபூரணத்தில் தேர்ச்சியடைய மலேசிய சபைகளுக்காக ஜெபியுங்கள்.
2. ஒரே சரீரத்தின் அங்கமென ஒருவருக்கொருவர் அடையாளங்கண்டு ஒருவரையொருவர் பராமரித்து வரும் சபைகள் எழும்ப ஜெபியுங்கள்.

நாள் 16/ஆகஸ்ட் 22
வாரம் 3 : கிறிஸ்துவுடன் ஒன்றித்து வளருதல்

# வேதாகம ஒற்றுமை சீரான ஒற்றுமையின் நிலையல்ல

ஒற்றுமையில்லாத அழிவையும் ஒற்றுமையின் வல்லமையையும் சாத்தான் நன்கு அறிந்து வைத்திருக்கிறான்.அதினால்தான் திருச்சபையில் பிரிவினைகளை பிசாசு ஏற்படுத்துகிறான். ஆதி சபை ஏற்படும்போதே கிரேக்க மொழி பேசும் விசுவாசிகளுக்கும் எபிரெய மொழி பேசும் விசுவாசிகளுக்கும் பராமரிப்பிலும் அன்பிலும் சந்தேகத்தைக் கிளப்புகிறான். யூத விசுவாசிகளை புறஜாதி விசுவாசிகளிடமிருந்து வேறுபடுத்துகிறான்.

எவ்வித ஒற்றுமையை வேதம் விளம்புகிறது?முதலாவது மார்க்க போதனையின் ஒற்றுமை.வேதாகமக்கண்ணாடியின் வழியாக விசுவாசிகள் தேவனையும் மானுடத்தையும் பார்க்கிறார்கள்.வேதாகமத்தின்வழி புரிந்து கொண்டபடி அவர்கள் ஒன்றையே விசுவாசித்து அதன் உண்மையையே பேசுகிறார்கள்.இரண்டாவது இருதயத்தின் ஒற்றுமை.விசுவாசிகள் மிக நெருக்கமாகவும் அற்புதமாகவும் ஒரே சரீரத்தில் இணைக்கப்பட்டிருப்பதினால் ஒருவரின் இன்பத்தையும் வேதனையையும் மற்றொருவர் அறிந்திருப்பர்.

ஒற்றுமையான சபையின் விசுவாசிகள் யாவரும் ஒரே சிந்தை, நடத்தை அல்லது மதிப்பீடு செய்பவர்களாக இருக்க முடியாது.கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வல்லமையை அனைத்து விசுவாசிகளும் அனுபவித்து அதின் வசன அடிப்படையில் ஒற்றுமையை உருவாக்குவதாகும்.தங்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற கட்டாயப்படுத்தாமல் முன்வந்து உருமாற்றத்திற்கு வழி கோலுகிறவர்கள்.தம்முடைய பிதாவின் அன்பில் முழுதுமாய் அர்ப்பணம் செய்து அடைக்கலமான இயேசுவின் அடிச்சுவட்டையே பின்பற்றுவர்.வேதாகமத்தை ஒட்டியிருக்கும்படி பரிசுத்த ஆவியானவரும் விசுவாசிகளுடைய சிந்தைகளையும் நடக்கைகளையும் ஒருங்கிணைத்து வனைவார். அதின் இறுதியில் திருச்சபையானது தேவனை மகிமைப்படுத்துகிற தேடுகிறவர்களைக் கவர்கிற, இருளான உலகத்தில் வெளிச்சத்தைக் கொண்டு வருகிற வேதாகம ஒற்றுமையை மேம்படுத்தும்.

### ஜெப குறிப்புகள்

1. உடைந்த உறவுகளை சரிப்படுத்தி, ஒப்புரவாக்குதலுக்கும் காயங்கள் கட்டுதலுக்காகவும் ஜெபியுங்கள்.
2. ஒருவருக்கொருவர் ஒற்றுமையுடன் ஜீவிக்க விசுவாசிகளின் ஜீவியங்களில் பரிசுத்த ஆவி ஆழமாய் கிரியை செய்ய ஜெபியுங்கள்.

# ஒற்றுமைக்கு சத்தியமே அஸ்திபாரம்

திருச்சபை நல்ல விளைவுடன் தேவன் நியமித்த பங்கினை நிறைவேற்றுவதற்கு அதின் ஒற்றுமை மிகவும் அத்தியாவசியம் என்றாலும், அதுவே முழுமையான நிலைப்பாடாக இராது.

1 யோவான் 1:3ல் நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம். ஓர் ஆழமான மற்றும் பலமான ஐக்கியத்தை வாசகர்களிடையே ஏற்படுத்துவதற்கு யோவான் இயேசுவை விசுவாசிக்கிறதைக் குறித்து முதலாவது பேசுகிறார். அதாவது இயேசு கிறிஸ்துவைப்பற்றி ஒரே வித கண்ணோட்டமும் புரிந்துணர்வும் இல்லாமற்போனால் ஜனங்கள் ஒருவரையொருவர் ஐக்கியப்படாமற்போகும்.எனவே சத்தியமே உண்மையான கிறிஸ்தவ ஐக்கியத்திற்கு அஸ்திபாரம்.

அது போல பவுல் தன்னுடைய ஸ்பெய்ன் பயணத்திற்கு பங்கெடுக்க விசுவாசிகளை அழைத்தபோது, கிறிஸ்தவர்கள் விசுவாசிக்க வேண்டிய இறையியல் புத்தகமாகிய ரோமரில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு ஆழமான அர்த்தமுள்ள பங்கினை செய்வதற்கு ஒரு பொதுவான இறையியலின் அஸ்திபாரம் அவசியப்படுகிறது என பவுல் கூறுகிறார்.

### ஜெப குறிப்புகள்

1. தேவ இராஜ்ஜியத்தின் விரிவாக்கத்திற்கு மலேசிய சபைகள் தங்களது பங்கினை ஒற்றுமையின் வழி புலப்படுத்த ஜெபியுங்கள்.
2. ஆவியில் உருவாக்கப்பட்ட வேத சத்தியம் நிறைந்த கிறிஸ்துவை உயர்த்துகிற விதத்தில் திருச்சபைகளின் ஒற்றுமை காணப்பட ஜெபியுங்கள்.

# ஐந்து வித ஊழிய அடிப்படையில் ஒற்றுமை

உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு மார்க்கபேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்கவேண்டியதேஎன கொரிந்து சபையில் ஏற்பட்ட பிரிவினைகளின்போது பவுல் பேசுகிறார். எல்லா கிறிஸ்தவர்களும் உண்மையான விசுவாசிகள் அல்லர் என்பதினால் ஒற்றுமையின்மை இருக்கும் என பவுல் எதிர்பார்த்தார்.அவிசுவாசமும் பொய்யான விசுவாசமும் திருச்சபையின் ஒற்றுமையின்மையை வெளிப்படுத்த அவசியமாகிறது.

சபையில் ஒற்றுமையை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் நாம் முற்படும்போது, சத்தியத்தை அல்லது வேதாகம உண்மையை அடகு வைத்து செய்யக்கூடாது.சொல்லப்போனால் வசன மார்க்க போதனையை நாம் உயர்த்தினவர்களாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைத் தவிர்க்கக் கூடாது.ஒற்றுமையின் பலிபீடத்தில் நாம் சத்தியத்தை பலியிடக்கூடாது.

ஒவ்வொரு சபையும் தொடர்ச்சியாக பேணவேண்டியதுதான் வசன அடிப்படையிலான ஒற்றுமை. தேவன் தமது ஞானத்தில் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், போதகர்கள் மற்றும் மேய்ப்பர்களை சபையில் நியமித்து மனுஷ குமாரனின் விசுவாசத்திலும் அறிவிலும் இந்த ஒற்றுமையை அடைய ஏற்படுத்தினார். பிரசங்கிக்கவும், சரிசெய்யவும், கடிந்து கொள்ளவும், மிகுந்த பொறுமையுடன் கூடிய ஜாக்கிரதையாக உற்சாகப்படுத்தவும் தேவ ஊழியர்கள் பணிக்கப்பட்டிருக்கின்றனர்.ஏனெனில் தேவ ஜனங்கள் உண்மையாகவே கிறிஸ்துவுக்குள் ஒரே இருதயத்துடன் ஒரே சிந்தையுடன் அன்பினால் தேவ சத்தியத்தை ஒருவருக்கொருவர் இவ்வுலகில் ஒரே குரலுடன் பறைசாற்றுவோம்.

### ஜெப குறிப்புகள்

1. தங்கள் திருச்சபைகளில் வேதாகம போதனைகளை மேய்ப்பர்கள், போதகர்கள், பிரசங்கிமார்கள், சுவிசேஷர்கள் மற்றும் தலைவர்கள் பொறுமையுடனும் விசுவாசத்துடனும் பறைசாற்ற ஜெபியுங்கள்.
2. தேவனுடைய நோக்கங்களை நமது தேசத்தில் நிறைவேற்றும்பொருட்டு சபைகளையும் / அதின் பல்வேறு பிரிவுகள் கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் இவற்றை ஒன்றுபடுத்த தேசிய சபைத்தலைவர்கள் முயற்சிகள் எடுக்கையில் அவர்களுக்கு தெய்வீக ஞானமும், வழிகாட்டுதலும், தரிசனங்களும் கிடைக்கப்பெற வேண்டி ஜெபியுங்கள்.

# அன்பு ஊற்றப்படுகிறது

ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள் (மத்தேயு 26:7)

மார்த்தாள் லாசருவின் சகோதரியாகிய பெத்தானியா மரியாள் என்று லூக்காவில் அவள் அடையாளங் காணப்பட்டாள்.தனது சுதந்தரத்தின் ஒரு பகுதியாகிய விலையேறப்பட்ட அந்த எண்ணெய்யை ஒரு வேளை அந்த அனாதைப் பெண் தன் திருமண டவுரியாகக் கூட வைத்திருந்திருக்கக்கூடும்.

இந்தத் தியானம் அன்பின் அடிப்படையில் துவங்குகிறது.தனது விலையேறப்பெற்ற பொருளை அதை விட அதிக மதிப்பு மிக்க ஒன்றிற்காக விட்டுக்கொடுத்தாள்.ஆனால் அன்பின் நிமித்தம் அந்த எண்ணெய்யை ஊற்றிய அவளுடைய செயல் முட்டாள்தனமானது என்று மற்றவர்களால் கருதப்பட்டது.
அதுபோல இந்த தேசத்தில் இயேசுவின் அன்பிற்காக அவருடைய திருச்சபை செயல்பட முன்வரும்போது, எதிர்ப்புக் குரல் எங்கிலும் எழும்பும்.இயேசுவை உண்மையாய் நேசிக்கும்போது இந்த உலகம் நம்மை ஈனமாகவும் வெறுப்புடனும் காணும்.எனினும் எந்த உபத்திரவமும் அந்த பரிபூரண அன்பிலிருந்து நம் வாழ்க்கையை பிரிக்க முடியாது.அவரைப்பற்றி அறிகிற அறிவிற்காக தன் ஜீவனையே நஷ்டப்படுத்தினாலும் அது இலாபமென்றே கருதப்படும்.

### ஜெப குறிப்புகள்

1. அவருடைய அன்பை, அழகை மாட்சிமையை உனக்கு வெளிப்படுத்த ஜெபி. தகுதியுள்ள ஒருவருக்கே நமது அன்பை ஊற்ற அது வழிவகுக்கும்.
2. அவருடைய வெளிப்படுத்தலுக்குத் துதியினாலும் ஸ்தோத்திரங்களினாலும் மறுமொழி கொடுக்க நேரத்தை செலவு செய்.
3. பெத்தானியா கிராமத்து மரியாளைப்போல விலைமதிக்க முடியாத ஆராதனையை அவருக்கு செலுத்துவாயாக. உபத்திரவத்தின்போது இயேசுவின் வார்த்தையில் திருச்சபை நிலை நிற்க ஜெபி.

# நமது விசுவாசத்தை உறுதிப்படுத்துதல்

உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். (யோவான் 15:18)

தேவனுக்கென நாம் பிரித்தெடுக்கப்பட வேண்டுமென்று அழைக்கப்பட்டிருக்கிறோம். உலகத்திற்குள் ஆனால் உலகத்தைப்போல அல்ல. இயேசுவுக்கு நமது விசுவாசத்தை செலுத்த முன்வரும்போது உடனடியாக உலகத்திற்கு நாம் பகையாளிகளாகிறோம். நமது ஆண்டவரை பெருந்தீனிக்காரர் என்றும் பிசாசினுடைய வல்லமையினால் அசுத்த ஆவிகளைத் துரத்துகிறார் என்றும் சுவிசேஷப்புத்தகங்களில் குற்றஞ்சுமத்தப்பட்டிருக்கிறார். இந்த உலகம் அவரை நேசிக்கவில்லை. மாறாக ஒரு கொலை பாதகனாகிய பரபாஸைத்தான் அது தெரிந்தெடுத்தது.

இப்போதுள்ள சூழ்நிலையில் உலகத்தால் வெறுக்கப்படுகிறோம் என்பதற்கு என்ன அர்த்தம். ஒரு வேளை நாம் நமது சக தோழர்களால் மத தீவிரவாதம் கொண்டவர்கள் என்றோ, மற்ற மாணவர்கள் முன்பு நமது விசுவாசத்திற்கு எதிராக சவால் விடப்பட்டோ அல்லது விசுவாசத்தில் வராத நமது சொந்த குடும்ப உறுப்பினர்களால் புறம்பாக்கப் படுகிறவர்களாகவோ காணப்படலாம். இருப்பினும் நமது நம்பிக்கை மத்தேயு5:10ன்படி நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம்அவர்களுடையதுஎன்பதாகும்.நமது உண்மையான வீடு அழிந்து போகிற இந்த உலகம் அல்ல ஆனால் நித்தியமான பரலோக இராஜ்ஜியம்.

### ஜெப குறிப்புகள்

1. இராஜ்ஜியத்திற்குரிய மக்களாக தேவன் நம்மை பிரித்தெடுத்த சிலாக்கியத்தை தியானம் பண்ணு.
2. அவருக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டி நமக்குக் கொடுக்கப்பட்ட கனத்திற்காகவும் பாக்கியத்திற்காகவும் நன்றி செலுத்தி அவருடைய கிருபையின் அழைப்பில் நாம் தொடர்ந்து நடக்க ஜெபி.
3. இந்த உலகம் உபத்திரவத்தினால் மிரட்டினாலும் திருச்சபையை இயேசுவுக்கு உத்தமமும் உண்மையுமாக இருக்க ஜெபி.

# அன்பு நேசிக்க நெருக்கி ஏவுகிறது.

கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். (லூக்கா 23:33-34)

அல்பாவும் ஒமேகாவும் ஆதியும் அந்தமுமான இயேசு, பிதாவை நித்திய காலமாய் அறிந்து வைத்திருக்கிறார். இயேசு வாழ்ந்து, மரித்து மறுபடியும் உயிர்த்தெழுந்து தம்முடைய பிதாவுடைய அன்பை வெளிப்படுத்த வந்த ஒரே பேரான குமாரனாக இருந்தபோதும் இந்த உலகம் கள்வர்களோடு சிலுவையில் மரிக்க அவரை ஒப்புக்கொடுத்தது. நமது ஆண்டவரும் நமக்கு முன்பாக ஓடி முடித்தவருமாகிய இயேசு கிறிஸ்து,அவரை பின்பற்றுகிறவர்கள் தங்கள் சிலுவையை சுமக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.அவரது சிலுவையை அவர் நேசித்தது போல நமது சிலுவையை நாம் நேசிக்க வேண்டும்.இயேசு தமது பிதாவை நேசித்த முதல் அன்பைப்போலவே நாமும் அந்த முதல் அன்பில் சார்ந்திருக்கிறவர்களாக இருந்தால்தான் அது சாத்தியமாகும்.முதலாவது இரத்த சாட்சியாக மரித்த ஸ்தேவான் “ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப்பாவத்தை சுமத்தாதிரும்” என்று சத்தமிட்டுச் சொன்னான் (அப் 7:60). இந்த அன்பில் பரிசுத்தவான்கள் தொடர்ந்து நின்றால்தான் தங்களது எதிராளிகளைப்பார்த்து “இயேசு உன்னை நேசிக்கிறார், நானும் உன்னை நேசிக்கிறேன்” என்று சொல்ல முடியும்.

### ஜெப குறிப்புகள்

1. உன்னை எதிராளியாகப்பார்க்கிற குறிப்பிட்ட நபர்களை தேவன் நமக்குக் நினைவுபடுத்திஅவர்கள் மீது தேவனுடைய மன்னிக்கும் கிருபையை அவிழ்த்துவிட தேவனிடம் கேள் (மத்தேயு 5:14-15).
2. உனது விண்ணப்பத்தினால் அவர்களை ஆசீர்வதிக்க நேரம் செலவு செய் (மத்தேயு 5:44-45).
3. உன்னை அன்பினால் வேரூன்றச்செய்யவும் அஸ்திபாரமிடப்படவும் உபத்திரவங்கள் வரும்போது அன்பே உனது மறுமொழியாக இருக்கவும் அவரிடம் கேள் (அப் 16:25-26).

நாள் 22/ஆகஸ்ட் 28
வாரம் 4 : சோதனைகள் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை

# சிறையிருப்பில் பரலோகத்தைத் திறந்து விடு.

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. (அப் 16:25-26)

அப்போஸ்தலர் புத்தகத்தில், திருச்சபை துரிதமாக வளர்ந்து, உலகத்தின் பல்வேறு இடங்களுக்கு அவருடைய இராஜ்ஜியம் விரிவாக்கம் கண்டது காரணம் உபத்திரவம்.பரலோகமானது முதலாவது திருச்சபைக்கு திறந்து கொடுத்தது போல சிறை மற்றும் நீதிமன்ற வாசல்களும் திறந்து கொடுத்தன.பரலோகத்தின் கிரியைகளைத் தடுக்க எதிர்சக்திகள் ஒன்றும் செய்ய இயலவில்லை. பவுலையும் சீலாவையும் நற்செய்தி அறிவிக்க சிறைச்சாலை தடுத்தாலும் வானத்திலும் பூமியிலும் அவர்களது அதிகாரத்தின் ஒருமைப்பாட்டு இணைப்பை அது தடுக்கமுடியாமற்போயிற்று. சிறையின் தடுப்புச்சுவருக்குள்ளாகவே அவர்கள் ஜெபித்து ஆராதித்து தேவ பிரசன்னத்தை வரவேற்றார்கள்.அஸ்திபாரம் அசைந்தது, கதவுகள் திறக்கப்பட்டன, சங்கிலிகள் தெறிபட்டன.ஒடுக்குதலின் ஆயுதங்கள் யாவும் ஆண்டவருடைய மகிமையில் உடைந்து போயின. எழுப்புதல் வரும்போது, அதனை குலைத்துப்போட மனிதன் என்ன செய்ய முடியும்?

## ஜெப குறிப்புகள்

1. இந்த தேசத்தில் அவருடைய எழுப்புதலுக்கு அவருடைய இருதயத்தோடு நம் இருதயம் எப்படி இணைய முடியும் என்று கேள். அதனை எப்படி அடையாளங்கண்டு அதில் பங்குள்ளவர்களாய் இருக்க முடியும் என்று ஜெபி.
2. பரலோக அதிகாரம் உன் வாழ்க்கையிலும், சபை, நாடு மற்றும் தேசங்களிலும் பிரகடனம் செய்யப்பட ஜெபி.
3. திருச்சபைகள் உபத்திரவங்களை எதிர்கொள்ள ஜெபத்துடனும் இந்த தேசத்தில் இன்னும் அதிகமான தேவ பிரசன்னம் வெளிப்படுத்தும்படி ஜெபித்து ஆராதனை செய்.

# களிகூறு.

அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய் (அப் 5:41).

ஒரு விசுவாசி தன்னுடைய கன்னத்தில் கத்தியினால் கீறி. குத்தி சித்திரவதைப் படுத்துகிறவர்களைப் பார்த்து பலமாக சிரித்தாராம்.அவர்கள் சினங்கொண்டு "ஏன் சிரிக்கிறாய்?சாவு பயம் உனக்கு இல்லையா" என கத்தினார்களாம். அதற்கு அவர் மேலும் சத்தமாக சிரித்து, "நான் ஏன் பயப்பட வேண்டும். நான் தான் ஏற்கனவே அவருக்குள் மரித்து விட்டேனே" என்றாராம்.

மனுஷீகப்பார்வையில்,பாடுகள் களிப்புக்கு சமமாகாது.ஆனால் தேவன் மனுஷீகத்திற்கு அப்பாற்பட்டவர்.எருசலேமில் தன்னுடைய மரணத்தைக்குறித்து இயேசு பேசினபோது சீடர்கள் சோர்வுற்றார்கள். போஜன பந்தியின்போது சீடர்கள் சகிக்க வேண்டிய பாடுகளைக்குறித்து இயேசு கூறினபோது அவர்கள் இடறலடைந்தார்கள்.ஆனால் இயேசு உயிர்த்தெழுந்து பரமேறுகிறபோது அவர்கள் தனிப்பட்ட நபராய் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.மரணத்தின் மீது கிறிஸ்து அடைந்த ஜெயமே அவர்களது மகிழ்ச்சிக்குக் காரணம்.கிறிஸ்துவைப்போல தாங்கள் அடைகிற பாடுகளுக்கு பாத்திரவான்களாக எண்ணப்பட்டது போல அவருடைய மகிமையிலும் பங்குள்ளவர்களாக மாறுவார்கள் என்பதை திட்டமாய் நிச்சயிக்கப்பட்டுள்ளனர்.

## ஜெப குறிப்புகள்

1. கடந்த காலங்களில் அவருக்காக நீ பட்ட பாடுகளை ஞாபகப்படுத்த ஆண்டவரிடம் கேள். அந்தப் பாடுகளில் நீ பங்குள்ள பாத்திரவானாய் மாறினதற்கு நன்றி செலுத்து.
2. மரணத்தினாலும் உயிர்த்தெழுதலினாலும் மரணத்தை ஜெயித்த அவருக்காக நன்றி துதி ஏறெடு.
3. சந்தாஷமானது ஆவியின் கனியில் ஒன்றாகையால் திருச்சபை இந்த தேசத்தின் உபத்திரவங்களைக் கடந்து செல்லும்போது சந்தோஷ ஆவியின் பொழிவுக்காக ஜெபியுங்கள்.

நாள் 24/ஆகஸ்ட் 30
வாரம் 4 : சோதனைகள் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை

# பலன்

மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. 2 கொரி 4:17

ஆதித்திருச்சபையில் உபத்திரவங்களும் இரத்தசாட்சியும் பொதுவாய் நடக்கிற சம்பவங்கள்.ஒரு சிலர் அதிக உபத்திரவத்தை அனுபவித்திருந்தாலும் மரணம் வரை சென்றிருக்கமாட்டார்கள். பவுல் இந்த வசனங்களில் சொல்லுகிறபடி நாம் எப்பொழுதும் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் இருப்பினும், இயேசுவின் மரணத்தை நம் சரீரங்களில் சுமந்து செல்கிறோம். இயேசு நம்மில் வெளிப்படும்பொருட்டு இவை நடக்கின்றன.பவுல் இதனை இலேசான உபத்திரவம் என்று கூறுகிறார். நமது பூமியின் ஜீவியத்தில் இலாபம் நஷ்டம் ஆகிய இவற்றை பரிசுத்தவான்களுக்கு கிடைக்கிற நித்திய கனமகிமைக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் நமது 70 அல்லது 80 ஆண்டுகள் மனித வாழ்க்கை ஒரு நொடிப்பொழுதாகத் தோன்றும். முழு விழிப்பு நிலையில் நித்தியத்திற்காக வாஞ்சிக்கும் அநேக பரிசுத்தவான்கள் உபத்திரவங்களை சகித்து செல்வது சுலபம்.நமது பூமியின் காரியங்களில் திருப்தியடைகிறோமா அல்லது பரலோகத்திற்காக இன்னும் ஏங்குகிறோமா?

## ஜெப குறிப்புகள்

1. உபத்திரவங்களைக் கடந்து செல்கிற வேளையில் காணப்படுகிற மற்றும் காணப்படாதவைகளுக்காக அவருக்குள் கிடைக்கிற பலனுக்காக நன்றி செலுத்து.
2. நித்தியத்தைக்குறித்து பெரிய வெளிப்பாடுகள், புரிந்துணர்வு மற்றும் விழிப்புணர்வு பெற அவரிடம் கேள்.
3. எதிர்வரும் உபத்திரவங்களை எதிர்கொள்ளும்பொருட்டு மலேசியாவின் திருச்சபைகள் தன் இருதயத்தை நித்தியத்தில் நிலைப்படுத்த ஜெபி.

# ஜெயமுள்ள திருச்சபை

ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான். வெளி 21:7

புதிய எருசலேமைக் குறித்தும், எல்லாம் புதிதாக்கப்படுகிறதும், அங்கே மரணமோ, வேதனையோ, கண்ணீரோ இல்லாமல் போவதைக்குறித்து வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆட்டுக்குட்டியானவரே வெளிச்சமாயிருப்பதினால் அங்கே சூரியனோ அல்லது சந்திரனோ தேவையில்லை.கடைசி காலங்களில் சாத்தான் பரிசுத்தவான்கள் மீது அவன் கொண்டு வருகிற உபத்திரவங்களைக்குறித்தும் சொல்லுகிறது. இந்த இரண்டு காட்சிகளும் இயேசுவின் வருகையை எதிர்நோக்கும் முன்பதாக விசுவாசிகளுக்கு கொடுக்கப்படுகிற புத்திமதிகளாகும். சுதந்திரம் என்றும் குமாரன் என்றும் சொல்லப்பட்ட வார்த்தைகள் எவ்வளவு அழகானவை. ஒரேபேரான குமாரனாய் இருக்கிற இராஜாவாகிய இயேசு, இந்த பூமியை அரசாளுகிறதற்கு எல்லா தகுதியையும் பெற்றிருக்கிறார். புத்திரசுவீகாரம் பெற்றிருக்கிற நாமும் கூட ஒருநாளில் அவர் இந்த தேசங்களை ஆளுகை செய்ய வரும்போது இந்த சுதந்திரத்தில் பங்குள்ளவர்களாகக் காணப்படுவோம் (வெளி 5:9-10; 19:11-16). தொடர்ந்து நில்.அவர் எல்லாவற்றிற்கும் தகுதியானவர்.

### ஜெப குறிப்புகள்

1. கடைசி காலங்களில் தேவ பிள்ளைகளுக்கு அவர் அருளிய வாக்குகளை எப்படி கோருவதென்று தியானம் செய்யுங்கள்.
2. உபத்திரவங்களின் நாட்களை சகிக்க அவருடைய சத்துவத்திற்காக ஜெபி.
3. வெளி 22:17 திருச்சபையின் கடைசிகால குரல். திருச்சபை ஜெப வேளைகளில் கூடும்போது இயேசு சீக்கிரமாய் திரும்ப வரவேண்டும் என்பது அவர்களுடைய விண்ணப்பமாக இருக்க வேண்டும்.

நாள் 26/செப்டம்பர் 1
வாரம் 5 : சோதனைகள் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை

# மகத்தான கட்டளை

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; மாற்கு 16:15-16

நற்செய்தியை தேசங்களுக்குக் கொண்டு சென்று தாக்கங்களை ஏற்படுத்துகிற பிரதான முகவர் பணியை செய்வதற்கு திருச்சபை பணிக்கப்பட்டிருக்கின்றது.பல்வேறு இன மக்களைக்கொண்ட வியூக நிலையில் மலேசியா அமைந்திருக்கிறது. மலேசியாவில் இயங்கும் கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை பல்லின மொழி மற்றும் பல்லின கலாச்சாரங்களில் இயற்கையாகவே ஊடுருவி இன பாகுபாடுகளின் மத்தியில் தொடர்பு கொள்ளுகிற ஆற்றல் பெற்றுள்ளது. உண்மையாகவே ஆசியா என்றும் இன இணைப்பை கொண்டு வரும் மலேசியா என்றும் நாம் கோரலாம்.

இந்த மகத்தான கட்டளையை ஏற்று எண்ணில்லா மக்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்த திருச்சபை தன் பணியை துரிதமாக்க வேண்டும்.அநேகர் தனிமையிலும், பயத்திலும், அன்பு மற்றும் அரவணைப்பிற்கு ஏங்கிக்கொண்டிருக்கின்றனர்.

### ஜெப குறிப்புகள்

1. நம்முடன் தொடர்பு கொள்ளும் அநேகருடைய வாழ்க்கையில் நமது சொகுசின் நிமித்தம் அவர்களை சந்திக்காமல் போனதற்காக மன்னிப்பு கேள்
2. அனுதினமும் நாம் சந்திக்கும் மக்கள் மத்தியில் அவர்கள் மொழியில் உரையாடி நற்செய்தி அறிவிக்கும் திறன் இருந்தும், அதைச் செய்யாமற் போனதற்காக மன்னிப்பு கேள்.
3. அனுதினமும் நாம் சந்திக்கும் தனிப்பட்டவருக்காக சில நிமிடங்கள் ஒதுக்கி ஜெபித்து இரக்கம் பாராட்டும்படி ஜெபி
4. நமது வேலை ஸ்தலங்களில், பள்ளிகளில், இல்லங்களில் சிறு சிறு குழுக்களை அமைத்து ஜெப நடை செய்ய ஜெபி.

# தேசங்களை சீஷராக்குதல்

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். (மத்தேயு 28:19-20)

சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்க இயேசு கிறிஸ்து திருச்சபைக்கு கட்டளை கொடுத்திருக்கிறார். மலேசிய திருச்சபை ஞானஸ்நானம் கொடுப்பதில் மாத்திரம் அல்ல மாறாக சீஷர்களாக்குவதிலும் பலவீனமாக இருக்கின்றனர். வார்த்தையில் பலமான கிறிஸ்தவர்களாயிருப்பதற்கு போதித்து தேறினவர்களாய் ஆக்குவது மாத்திரமல்ல மாறாக உலகத்திற்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இந்த முக்கியமான பணியை நாம் புறக்கணிப்போமானால் நமது உறுப்பினர்கள் உலகப்பார்வையில் தங்களது சிந்தைகளை கொண்டு சென்று ஒத்த வேஷத்திற்கு தங்களை வனையச் செய்வார்கள்.இந்த ஒத்த வேஷ நிலையிலிருந்து சரியான பாதைக்குத் திருப்ப வேண்டும்.

நாம் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், இருக்க வேண்டும்.இந்த மூன்று அடையாளங்களை திருச்சபை கோர வேண்டும்.

## ஜெப குறிப்புகள்

1. தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், இருக்கவேண்டிய திருச்சபை தனது சீஷத்துவ பங்கிலிருந்துதவறினதற்காக மன்னிப்பு கேள்.
2. உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டிய சரியான ஸ்தானத்திற்கு நமது பிள்ளைகளை, வாலிபர்களை, புதிய கிறிஸ்தவர்களை சீஷராக்கும் பணியை செய்ய ஜெபி.
3. ஒவ்வொரு ஸ்தல சபையிலும் வலிமையான சீஷத்துவம் மேம்பாடடைய ஜெபி.
4. நமது வாழ்க்கையில் அனுதினமும் அனுபவிக்கிற உண்மைத்துவத்தை நாம் சந்திக்கிற ஒவ்வொரு நபரிடமும் சாட்சி பகர ஜெபி.

# பன்மொழி பேசும் பல்வேறு தேசங்களிலிருந்து வந்தவர்கள் மத்தியில் சாட்சி பகர்தல்

பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப் 1:8)

எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருங்கள் என்று ஆண்டவராகிய இயேசு நமக்குக் கட்டளையிட்டார்.எருசலேம் என்பது நாம் குடியிருக்கிற ஸ்தலமும், யூதேயா என்பது மக்கள் குடியிருக்கும் இடமாகவும் இருக்கிறது.மலேசியா பல் வேறு மொழிகளைப்பேசுகிற நாடாக குறிப்பாக சீனம், இந்திய, ஆங்கில மற்றும் மலாய் மொழி பேசுபவர்களாக இருக்கின்றனர். (ஆங்கிலம்-சீனம் பேசும் சீனர்கள் 27%மும் 4.4% இந்திய கிறிஸ்தவர்களும் மலேசியாவில் உள்ளனர். ஆனால் மலாய் மொழி பேசுகிற கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் கீழ் நிலையில் 64% உள்ளனர்.

எந்தவொரு மிரட்டல் விடுக்கப்பட்டாலும் ஒன்றோடொன்று பாதிக்கும் பிரிவு நிலையில்தான் காணப்படுகிறது.நமது மொழியை, அவரவர்களுடைய கலாச்சாரத்தை, நமது சமய மற்றும் ஆராதிக்கிற சுதந்தரத்தை நாம் ஒற்றுமையுள்ளவர்களாக இருக்கும்போது.அதிகமாய் செய்ய இயலுகிறது.

### ஜெப குறிப்புகள்

1. மலேசியாவின் உயரிய சட்டமாக அரசியல் சாசனம் தொடர்ந்து இருக்க ஜெபி.
2. சமய மற்றும் நில சுதந்திரத்திற்கு எதிராக அரசியல் சாசனம் திரிக்கப்பட்டு அது மிரட்டலாக அமையாதபடி ஜெபி.
3. வேதாகம சத்தியத்தில் உறுதியாக வேரூன்றி நிற்கிற பன்மொழி பேசும் கிறிஸ்தவர்கள் பலமாய் தரித்திருக்க ஜெபி.
4. பன்மொழி பேசும் கிறிஸ்தவர்கள் மொழியால் வேறுபடாமல் ஒற்றுமையாக இணைந்திருக்க ஜெபி.
5. வறுமையில் காணப்படும் பூர்வீக கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்படாமலும் அவர்களுக்கு ஆண்டவர் வாசல்களைத் திறந்து உதவி செய்யவும் ஜெபி.

# மலேசியாவின் பூர்வீகக் குடியினரை சீஷராக்குதல்

இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைகளிலிருமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள். சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன் (வெளி 7:9)

தீபகற்ப மலேசியாவில் முதன் முதலில் குடிபுகுந்து மலாய்க்காரர் அல்லாத சிறுபான்மையினராக பூர்வீகக் குடினர் விளங்கினர்.18 & 19ஆம் நூற்றாண்டுகளில் அவர்கள் கரையோரவாசிகளால் அடிமைகளாக வியாபாரம் செய்யப்பட்டனர்.அதினால் இன்னும் காடுகளின் உள்பகுதிக்குள் நுழைந்து கொண்டனர். ப்ரோட்டொ மலாய், செனோய் மற்றும் செமாங் பிரிவுகளாய் இந்த 19 மொழிகள் பேசும் பூர்வீகத்தினர் தங்களை தனிமைப்படுத்திக்கொண்டனர்.குறிப்பிட்ட பூர்வீகத்தினர் கிறிஸ்தவர்களாய்க் காணப்பட்டு திருச்சபைகளை ஸ்தாபித்துள்ளனர்.

ஓராங் அஸ்லி என்று அழைக்கப்படும் இந்த பூர்வீகத்தினர் 1954ன் பூர்வீக சட்ட விதிக்கு உட்பட்டுள்ளனர்.அந்த விதியின்படிபிரதானமாக கம்யூனிச கொள்கையிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும்.ஆனால் துரதிஷ்டமாக 50 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவர்களது நலன்கள் மேம்பாடடையவில்லை.திருச்சபை தங்கள் நேரத்தையும் பிரயாசத்தையும் ஓராங் அஸ்லியின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு செலவிடவேண்டும்.

### ஜெப குறிப்புகள்

1. பூர்வீகத்தினருடைய நில உரிமைகளை அரசாங்கம் பேண வேண்டுமென ஜெபி.
2. எங்கெல்லாம் தங்கள் நிலப்பகுதியில் சபைகளை நிறுவ பூர்வீகக்குடினர் விரும்புகிறார்களோ அங்கெல்லாம் அதை அனுமதிக்கும் அதிகாரத்தை அரசாங்கம் அவர்களுக்கு வழங்க ஜெபி.
3. பூர்வீகக்குடினரின் இளைய சந்ததியினர் தங்களது கல்வியில் சிறந்து விளங்க ஜெபி.
4. மலேசியாவில் இயங்கும் ஓராங் அஸ்லி திருச்சபை தங்களது வாலிபர்களை சீஷர்களாக்குவதை உறுதி செய்ய ஜெபி.
5. தங்களது பூர்வீக மக்களை இன்னும் சிறப்பாக பிரதிநிதிக்க இளைய குடியினர் எழும்ப ஜெபி.

நாள் 30/செப்டம்பர் 5
வாரம் 5 : சோதனைகள் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை

# மலேசியாவில் பூமிபுத்ரா கிறிஸ்தவ தலைமத்துவத்தை எழுப்புதல்

என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம் மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்துகொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக. (யோசுவா 1:7)

பூர்வீக பூமிபுத்ராக்கள், மலேசியாவின் கிறிஸ்தவர்களாக 64% கொண்டு முதுகெலும்பாக விளங்குகின்றனர்.44% சரவாக்கிலும், 31.5% சபாவிலும் கிறிஸ்தவர்களாக உள்ளனர். சபாவில் கடாசான், மூரூட் சாதியினரும், சரவாக்கில் இபான், பிடாயூ மற்றும் ஓராங் உலு சாதியினரும் பூர்வீகக் கிறிஸ்தவர்களாக உள்ளனர்.

சமீப காலத்து சம்பவங்கள், சபா, சரவாக் கிறிஸ்தவர்களின் சமய சுதந்திரத்திற்கு மிரட்டலாக விளங்கி வருவது பெரிய கரிசனையாகக் காணப்படுகிறது. கூட்டரசு மலேசியாவின் உருவாக்கத்திற்கு சபா மற்றும் சரவாக்குடன் செய்து கொண்ட மலேசிய உடன்பாடு அவர்களது நலன்கள், உரிமைகள் சுதந்திரம் போன்றவற்றை பாதுகாப்பதாக இப்பொழுது காணப்படவில்லை.

நில விவகாரங்களில் அத்துமீறல்கள் இடம்பெற்றதாக பூர்வீகத் தலைவர்கள் கருதுகின்றனர்.பூர்வீக நிலங்கள் ஏரிகள் நிர்மாணிக்கப்பட கட்டாயத்தின்பேரில் அபகரிக்கப்பட்டதாக பெனான், காயான் மற்றும் கென்ஞா சாதி மக்கள் முறையிட்டுள்ளனர்.

### ஜெப குறிப்புகள்

1. மலேசியா தோற்றுவிக்கப்படும்போது செய்த உடன்படிக்கை மீறப்படாமல் சபா, சரவாக் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகள் யாவும் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள்.
2. சமூகத்தில், மலாய் மொழி பேசும் முதுகெலும்பாக உள்ள கிறிஸ்தவ பூமிபுத்ரா வர்கத்தினர் தங்களது நியாயமான ஸ்தானங்களைப் பெற ஜெபி.
3. சபா, சரவாக்கில் பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதலின் புதிய அலை எழும்ப ஜெபி.
4. சபா, சரவாக் மக்களின் நில உரிமைகள அரசாங்கத்தினால் காக்கப்பட ஜெபி.

# மலேசியாவின் இளைஞர்களை சீஷர்களாக்குதல்

ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு. அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.
(2 தீமோத்தேயு 2:1-2)

ஒவ்வொரு சந்ததிக்கும் சுவிசேஷமும் சீஷத்துவமும் போதிக்கப்படவேண்டும்.சபைகள் வளர்ந்தாலும் அவை ஆழமில்லாமலும் பலவீனமுமாகவே இருக்கின்றன.திருச்சபையின் ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் பலமான தலைவர்கள் தங்கள் விசுவாசத்தை அடுத்த சந்ததிக்கு வழங்க வேண்டும்.தேவ பண்புகளிலும் பொறுப்புகளிலும் இளைய சந்ததியை உருவாக்க வேண்டிய அவசியம் எழும்பியுள்ளது. சீஷராக்கும் பணியை ஆண்டவராகிய இயேசுவின் கட்டளையாக திருச்சபை பெற்றுள்ளது.அதை நாம் புறக்கணித்தால் நமது வாலிபர்கள் உலக கலாச்சாரங்களில், லௌகீகங்களில் சொந்த மதிப்பீட்டில் வனையப்படுவது ஆச்சரியமான ஒன்றாக இராது.சுய அழிவிலிருந்து இளைஞர்கள் திசை திருப்பப்பட வேண்டியது அவசியமான ஒன்றாக காணப்டுகிறது.

இளைய தலைமுறையினரை ஒரு விசுவாசமுள்ள ஆவிக்குரிய ஆண் பெண்ணாக போதித்து வழிகாட்டி வேதாகம அஸ்திபாரத்தின் சீஷத்துவத்திற்கு திருப்ப வேண்டியது அவசியம்.

## ஜெப குறிப்புகள்

1. வஞ்சனை, சொகுசு, ஒத்தவேஷம், மதம், சுய மையம், சுய திருப்தி அசுத்த சிந்தனைகள் வேறுபாடுகள் இவற்றிலிருந்து விடுபட ஜெபி.
2. வேதாகம சத்தியத்தில், தெய்வீகம் மற்றும் விசுவாசத்தில் விசுவாசிகளை வழிநடத்த சீஷத்துவ புதிப்பிப்புக்குள் திருச்சபை செல்ல ஜெபி.
3. தெய்வ பயமுள்ள விசுவாசமுள்ள வாலிப சந்ததியாக ஆணும் பெண்ணும் ஆகும் பொருட்டு ஒத்த வேஷம் தரிக்கும் கலாச்சாரத்தில் இருந்து திரும்ப ஜெபி.
4. அடுத்த சந்ததியை சீஷத்துவத்தில் உருவாக்கும் விசுவாசமுள்ள பெரியவர்கள் எழும்ப ஜெபி.
5. தங்களது பிள்ளைகளின் ஆவிக்குரிய மேம்பாட்டை முக்கியப்படுத்த வேண்டி பெற்றோர்களுக்காக ஜெபி.

# உலகத்தின் முடிவு பரியந்தம் தேசங்களை சீஷராக்குதல்

நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் (மத் 28:19)

எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப் 1:8)

ஒவ்வொரு வருடமும் பில்லியன் கணக்கில் மக்கள் தேசங்களின் எல்லைகளில் பயணிக்கின்றனர்.2011ல் மாத்திரம் 3.5 மில்லியன் அந்நிய நாட்டு மக்கள் நம் தேசத்தில் குடிபுகுந்தனர்.அதில் 1.5 மில்லியன் அதிகாரப்பூர்வ நுழைவும் 2 மில்லியன் பேர்கள் சட்டவிரோதமாகவும் உள்ளனர் என கணக்கிடப்பட்டிருக்கிறது.100 நாடுகளிலிருந்து சுமார் 100,000 அந்நிய மாணவர்கள் நம் தேசத்தில் பயிலுகின்றனர்.அதில் 8.6% அந்நிய கிறிஸ்தவர்கள் மலேசியாவில் உள்ளனர்.பெரும்பாலான அந்நியர்கள் ஒடுக்கப்பட்டு பாடுகளை அனுபவிக்கின்றனர்.அநேக அகதிகளுக்கு மலேசியா தஞ்சமாக விளங்குகிறது.

மலேசியர்களும் உலகத்தின் மூலை முடுக்குகளுக்கு பயணம் செய்கின்றனர்.அதிகமானோர் வியாபாரம் நிமித்தமாக வெளிநாடுகளில் குடிபெயர்ந்தும் அதே சமயம் மலேசியாவில் தொடர்பு கொண்டுள்ளவர்களாகவும் இருக்கின்றனர்.மலேசியாவிலும் அயல் தேசங்களிலும் மற்ற தேசத்தினரை சந்திக்கும் வாய்ப்புகள் அதிகம்.

### ஜெப குறிப்புகள்

1. சபைகள் எழும்பி அந்நிய தொழிலாளர், மாணவர்கள் மற்றும் அகதிகளை சந்தித்து சாட்சி பகர ஜெபி.
2. வேதாகம சத்தியத்தில் இந்த அந்நிய வர்கத்தினர் வேரூன்ற ஜெபி.
3. வெளிநாடுகளுக்கு பயணிக்கும் நாம் வாய்ப்பினை பயன்படுத்தி அங்குள்ள ஸ்தல சபைகளையும் வசதியற்ற நிலையில் உள்ள ஊழியங்களையும் தாங்குவோமாக.
4. மலேசியாவிற்கு வரும் அந்நிய தொழிலாளர்கள் கடந்து செல்கிற பாடுகளின் மத்தியில் அவர்களுக்கு உதவும் சாட்சிகளாகக் காணப்பட ஜெபி.

# திருச்சபையும் இராஜ்ஜியத்தின் சுவிசேஷமும்

நீ முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தைத் தெரிவு செய்யாமல் போனால் இறுதியில் அதை நீ தெரிவு செய்வது என்பது விருதாவான காரியம் — வில்லியம் லாவ்

தேவனுடைய இராஜ்ஜியம் என்பது கிறிஸ்தவர்கள் மத்தியில் சாதாரண சம்பாஷனையாகப் போய் விட்டது.நேர்த்தியாய் காணவேண்டுமானால் அதின் அர்த்தம் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

வேதாகம விளக்கமானது என்னவெனில் தேவன் ஆளுகையை நடப்பித்து ஆட்சி செய்வதுதான் தேவ இராஜ்ஜியம் எனப்படுவது.இதில் தேவனுடைய அரசாளுகையை முழுதுமாய் ஏற்று கீழ்ப்படிவதாகும்.அவருடைய அரசாட்சி எல்லாவற்றின் மேலும் என்றாலும் எல்லாருமே அதனை ஏற்றுக்கொண்டு அதற்கு இணங்குவது கிடையாது. (சங் 103:19; மத்தேயு 6:9-10)

தேவனுடைய இராஜ்ஜியத்தின் அற்புதம் உங்களுக்குள்ளும் உங்களிலும் இருக்கிறது என்று இயேசு சொன்னார் (லூக் 17:20-21).வேறொரு இராஜ்ஜியத்தின் அம்சம் வரப்போகிறதைக் குறித்துச் சொல்லப்படுகிறது.அதன் பொருள் என்னவெனில், அவருடைய அரசாளுகையை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் மத்தியில் அவர் இருக்கிறார் என்பதே.அது எவ்வளவு எண்ணிக்கையைக்கொண்டது என்றோ கூடும்போது நாம் என்ன மொழி பேசுகிறோம் என்றோ பாராமல் நாம் இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாய் ஒன்று சேரும்போது தேவன் நம் மத்தியில் இருக்கிறார் என்பதை அறிவது.

இராஜ்ஜியத்தின் நடவடிக்கைகள் தேவனுக்குரியது; ஆனாலும் அவர் தமது மக்களுடனும் கிரியை செய்கிறார்.எனவே அவருடைய ஜனங்கள் முதலாவது இராஜ்ஜியத்தையும் நீதியையும் தேட வேண்டும் (மத் 6:33).

### ஜெப குறிப்புகள்

1. மத்தேயு 6:33ஐ தியானம் செய்க. முதலாவது இராஜ்ஜியத்தையும் நீதியையும் தேடுங்கள் என்றால் என்ன என்பதை அவரிடம் கேள்.
2. அவரை இராஜா என்று மனசாட்சியுடன் கனம் பண்ணி அவரின் இராஜ்ஜிய நிலை மதிப்பீடுகளில் ஜீவியம் செய்.

# பரலோகத்திற்கு சொந்தக்காரரர் யார்?

சிலாக்கியம் பெற்ற ஸ்தானத்தை உடைய ஏழையின் அடிப்படை ஏழ்மை அல்ல ஆனால் தேவனில் எளிமையுள்ளவர்தாம் — கட்டிரெஸ்

அந்நியர்களுக்கு குடியுரிமை கொடுக்கும் ஒரு தேசம் கெடுபிடியான நிபந்தனைகளை விதித்து தெரிவு செய்யும்.பொதுவாக தகுதியானவர்கள், திறன் மிக்கவர்கள், பணக்காரர்கள் இதில் இடம் பிடிப்பர். ஒரு சில நாடுகளே அகதிகளுக்கு தங்கள் வாசலைத் திறந்து கொடுக்கும்-பெரும்பாலானவை கிடையாது.நீ ஏழையா, திறனில்லாதவரா, தகுதியில்லாதவரா, கிட்டவே போக வேண்டாம்.

அதிர்ஷ்டவசமாக ஏழைகள் தேவ இராஜ்ஜியத்தில் வரவேற்கப்படுகின்றனர்.இராஜாவை விசுவாசிக்கிறவர்கள் யாவருக்கும் இடம் உண்டு என்ற போதிலும், ஏழைகள், துன்பப்படுகிறவர்கள், ஒடுக்கப்படுகிறவர்கள் யாவருக்கும் விசேஷித்த இடம் உண்டு.எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள், பரலோக இராஜ்ஜியம் அவர்களுடையது (மத் 6:20).ஏன் இப்படி?ஏழைகள் மற்றவரைவிட சிறந்தவர்கள் அல்லது தூய்மையானவர்களா? அல்ல. அவர்கள் ஏழைகளாயிருந்து நெறியிலோ, ஆவிக்குரிய ரீதியிலோ மற்றவர்களைக்காட்டிலும் சிறந்தவர்கள் என்றல்ல ஆனால் சிருஷ்டித்த சிருஷ்டிகரின் சாயலுக்கு எதிராக அவர்கள் சிறுமைப்படுத்தப்படுவதினால்தான்.

பூமியின் இராஜாக்கள் அல்லது இந்த இராஜ்ஜியத்தின் தலைவர்களைப்போல் அல்லாமல் இந்த இராஜா ஏழைகளுக்கு இடம் கொடுத்தவர் மாத்திரம் அல்ல மாறாக தாமே ஏழையாக முன்வந்து (2 கொரி 8:9) அவர்களோடு தம்மை இனங்கண்டு கொண்டவர். தங்களது இராஜா ஏழைகளைத் தேடி வந்தவர் போலவே திருச்சபையும் ஏழைகளைத் தேடிப் போவதற்கு முன்பாக அவர்களை இனங்கண்டு கொள்வது நெருக்கடியான ஒரு படியாகும்.திருச்சபை செய்யக்கூடிய ஒரு அணுகுமுறை யாதெனில் முக்கிய கொள்கையின் அடிப்படையிலே ஏழைகளையும் ஒதுக்கப்பட்டவர்களையும் இனங்கண்டு கொள்வது.

**ஜெப குறிப்புகள்**

1. அவருடைய இராஜ்ஜியத்தில் உனக்கு இடங்கொடுத்த அவருக்கு நன்றி செலுத்துவாயாக.
2. இயேசு செய்தபடி ஏழைகளையும் தேவையுள்ளவர்களையும் சந்திக்கும்பொருட்டு திருச்சபை சிறப்பான பிரயாசங்கள் எடுக்க ஜெபி.
3. ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்கிற பணிகளில் உன்னை ஈடுபடுத்திக்கொள்.

நாள் 35/செப்டம்பர் 10

வாரம் 6 : சோதனைகள் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை

# தேவ இராஜ்ஜியமும் ஜெபமும்

உமது இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக (மத் 6:10)

நமது கோரிக்கையை மனிதர் தள்ளிவிடலாம், நமது செய்தியை புறக்கணிக்கலாம், நமது விவாதங்களை எதிர்க்கலாம், நபர்களை ஏளனம் செய்யலாம், ஆனால் அவை யாவும் நமது ஜெபத்திற்கு முன்பாக விருதா – ஜே. சிட்லோ பேக்ஸ்டர்

மத்தேயுவில் இயேசு சீஷர்களுக்கு போதனையாக கற்றுக்கொடுத்த வசனம் பதிவாகியிருக்கிறது.நாம் ஜெபிக்கும்போது கடைபிடிக்கவேண்டிய சில முக்கிய கூறுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பரலோகத்தின் பிதாவுக்குச் சொந்தமானது தான் இராஜ்ஜியம் என்பதை சபை தன் ஜெபத்தில் நினைவு கூற வேண்டியது முதலாவது காரியமாயிருக்கிறது.அவர் உன்னதத்தில் தமது இராஜ்ஜியத்தை ஞானமாகவும் நேர்த்தியாகவும் ஆளுகை செய்கிறார்.எதிர்கால இராஜ்ஜியத்தைக் குறித்து நாம் கவலை கொள்ளத்தேவையில்லை.

இரண்டாவதாக நமது ஜெபமானது இராஜ்ஜியத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்.ஆண்டவருடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்பட வேண்டிய ஜெபமாக இருக்க வேண்டும்.இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்போது, தேவனுடைய பரிபூரண சித்தமும் ஆசீவாதமும் திருச்சபையையும் தேசத்தையும் மணக்கச்செய்யும்.அவருடைய ஜனங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாத ஊற்றாக விளங்குவர்.இது இயேசுவினுடைய தெளிவான போதனை.இராஜ்ஜியம் முகாமையாகும்போது, தேவன் தம்முடைய ஜனங்களின் தேவைகளைச் சந்திப்பார்.

### ஜெப குறிப்புகள்

1. இராஜ்ஜியத்தை அவர் எப்பொழுதும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற தேவனை அங்கீகாரம் செய்.
2. அவருடைய இராஜ்ஜியத்தினிமித்தம் அவரின் பரிபூரண சித்தத்திற்கு நமது திருச்சபை கீழ்ப்படிய கற்றுக்கொள்ளும்படி ஜெபி.
3. தங்களுடைய ஆவிக்குரிய ஒழுங்கில் அவருடைய பிள்ளைகள் ஜெபத்தை முதன்மைப்படுத்த ஜெபி.

# இராஜ்ஜிய ஸ்தலம்

என் வாழ்க்கையின் இராஜாவே, இப்பொழுது உம்மை முடிசூட்டுகிறேன். மகிமை உமக்குரியதாக இருக்கட்டும் – ஜென்னி எவலின் ஹசேய் (1874-1958)

இராஜா அரசாளுகிறதே இராஜ்ஜியத்தின் ஸ்தலம்.இயேசு இராஜ்ஜியத்தை அரசாளுகிறார் என்பதே சுவிசேஷமும் நற்செய்தியுமாய் இருக்கிறது.அவர் அரசாளுகிற ஸ்தலத்தில் நாம் நீதி, சாமாதானம், சந்தோஷம் இவற்றை எதிர்பார்க்கலாம் (ரோமர் 14:7).

எப்பொழுது தேவ இராஜ்ஜியம் வரும் என்று பரிசேயர்கள் இயேசுவைக்கேட்டனர். அதற்கு இயேசு கவனமாக காலங்களையும் பருவங்களையும் கண்காணிக்கும்போது வராது ஏனெனில்தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறது என்றார் (லூக்கா 17:20-21)

இயேசு உங்கள் வாழ்க்கையின் இராஜாவாக இருந்தால் அங்கே தான் அவருடைய ஸ்தலமும் இருக்கும். ஜனங்களை இருளின் அதிகாரத்தினின்று விடுவித்துதமது குமாரனின் இராஜ்ஜியத்திற்கு இன்னமும் தேவன் உட்படுத்துகிறார் (கொலோ 1:13).இயேசு உன் இராஜாவா?

**ஜெப குறிப்புகள்**

1. நம் தேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் இராஜ்ஜியத்தையும் இராஜாவையும் தேடிக் கண்டுபிடிக்க ஜெபி.
2. பரிசுத்த ஆவியில் நீதி, அன்பு, சந்தோஷம் இவற்றை விசுவாசிகள் அனுபவிக்க ஜெபி.

நாள் 37/செப்டம்பர் 12
வாரம் 6 : சோதனைகள் உபத்திரவங்களின் மத்தியில் திருச்சபை

# இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது.

நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்க வேண்டும் (அப் 14:22)

இராஜாவின் ஆளுகைக்கு கட்டுப்பட மறுத்து தங்களது சுய இராஜாங்கத்தை நடத்துபவர் தேவ இராஜ்ஜியத்தில் நுழைய முடியாது.சுய ஆட்சியிலிருந்து திரும்பி இராஜாவாகிய கிறிஸ்துவின் ஆட்சிக்கு நுழைவதே மனந்திரும்புதல் என்பதாகும். மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது என்று யோவான் ஸ்நானகன் மத் 3:2ல் பறை சாற்றியுள்ளார். இராஜ்ஜியத்தில் நுழைய விரும்புவோர் தங்களது ஜீவியத்தின் ஆளுகையை விட்டு விட வேண்டும்.

உலக ஐசுவரியங்களில் கவரப்படுகிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது அரிதான காரியம் என்று இயேசு சொன்னார் (லூக்கா 18:24)

தேவ இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கிற ஒருவன் கர்த்தராகிய இயேசுவை வாயினாலே அறிக்கையிட வேண்டும் என இயேசு பகர்கிறார் (ரோமர் 10:9).பிறகு இராஜாவின் கட்டளைகளுக்கு இணங்கிய ஒரு ஜீவியம் செய்ய வேண்டும்.

இராஜ்ஜியத்தின் நற்செய்தி எங்கேயும் சொல்லப்படவேண்டும் என இயேசு சொல்கிறார்.எனினும் நற்செய்தி உபத்திரவத்தைக் கவரும்.சீஷர்கள் உத்தமத்தோடு இந்த கட்டளைகளை பின்பற்றினபோது, உபத்திரவப்பட்டார்கள். எருசலேமிலிருந்து சிதறடிக்கப்பட்டாலும் அவர்கள் எங்கும் சுற்றித்திரிந்து தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தியை அறிவித்தார்கள் (அப் 8:1-4)

பாடுகளின் வழி கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார்கள் (எபி 5:8).தங்கள் சிலுவையை சுமந்து கிறிஸ்துவைப் பின்பற்றினார்கள் (லூக்கா 9:23).பாடுகள் பொறுமையை உண்டாக்கும் எனக் கற்றுக்கொண்டார்கள் (ரோமர் 5:3).

### ஜெப குறிப்புகள்

1. அவருக்குக் கீழ்ப்படிய கிருபையும் வல்லமையும் தேவன் கொடுக்க ஜெபி.
2. நமக்கு முன் வைத்திருக்கிற சந்தோஷத்தின் பொருட்டு, கிறிஸ்துவின் சீஷர்களாகிய நாம் அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகிக்கும் புதியதோர் தரிசனத்தைப் பெற ஜெபி.

# இராஜ்ஜியத்திற்குரிய செய்தி

எல்லா நேரங்களிலும் சுவிசேஷத்தை பிரசங்கி. அவசியம் ஏற்பட்டால் வார்த்தைகளைப் பயன்படுத்து. — அசிஸியின் பிரான்சிஸ்

தேவனுடைய இராஜ்ஜியம் சமீபமாயிற்று எனும் நற்செய்தியை இயேசு தம் ஊழியத்தின் துவக்கத்தில் பிரசங்கித்தார் (மாற்கு 1:14-15).தமது ஊழியத்தின் இறுதியில் மகத்தான கட்டளையை சவாலாக தம் சீஷர்களுக்கு சொல்லி உலகமெங்கும் போய் சீஷர்களாக்குங்கள் என்றும் பணித்தார்.

இந்த நற்செய்தி கூறுவதின் நோக்கமானது தேவனுடைய அழைப்பை ஏற்று மனந்திரும்புதலிலும் விசுவாசத்திலும் இராஜ்ஜியத்தில் பங்கு பெறுவதேயாகும்.

தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் இயேசு மத்தியஸ்தராகி முழு திருப்திகரமான நிலையில் கிருபாதார பலியாக தமது ஜீவனை தந்தார்.மேலும் தேவ இராஜ்ஜியமானது கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தி சமூகத்திற்கும் தேசத்திற்கும் மாற்றங்களைக் கொண்டு வருவதாகும்.

இந்த செய்தியைத்தான் நாம் உத்தமத்தோடு பறைசாற்ற வேண்டும்.இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாகிய நாம், இந்த செய்தியை அறிவிப்பதில் ஊக்கமும் விளைவையும் கொண்டு வர வேண்டும்.இந்த செய்திகளை நாம் கூறும்போது, மக்களின் இருதயம் திறக்கப்படவும் நாம் ஜெபிக்க வேண்டும்.

### ஜெப குறிப்புகள்

1. தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தியை அறிவிக்கும்போது உத்தமம் காணப்பட ஜெபி.
2. இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாகிய நாம் வார்த்தை விளங்கும் அளவிற்கு நமது பேச்சும் இருக்க வேண்டும்.
3. இராஜ்ஜியத்தின் செய்தியைக் கேட்க மக்கள் தங்களது இருதயம் திறக்கப்பட ஜெபி.

# யுத்தத்தில் இராஜ்ஜியம்

சாத்தானை மேற்கொண்டு ஜெயம்பெறுவது என்பது ஏதோ நமது கற்பனையின் அதிகாரத்தில் சவால் விடுவது அல்ல. மாறாக நீதியைத் தரித்து, பாவத்தை விலக்கி, சத்தியத்தில் நிலை நிற்பதாகும் (1தீமோ 1:18-19; யாக்கோபு 4:7; 1 பேதுரு 5:9)- ஜோன் மெக் ஆர்தர்

நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே மத் 12:28) என இயேசு சொன்னதாக மத்தேயு சுவிசேஷத்தில் குறிப்பிடுகிறார். தேவ இராஜ்ஜியம் வருவதற்கு இருளின் இராஜ்ஜியத்துடன் ஒரு யுத்தம் நடத்த வேண்டியது அவசியமாகிறது.

நமது மாம்ச கண்கள் ஆவிக்குரிய யுத்தத்தைக் காணாமல் இருக்கிறதினால் அது உண்மையல்ல என்று ஆகிவிடாது.ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு ( எபேசியர் 6:12).

யுத்தத்திற்கென ஆவிக்குரிய சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்ளும்படிக்கும் நமக்கு பணிக்கப்பட்டிருக்கின்றது.நமது தேசத்தை ஜெபத்தில் தாங்குவோம்.நமது தேசத்தில் ஊறு விளைவிக்கிற விவகாரங்கள் ஏராளம்.இயேசுவின் நாமத்தில் சரீர வெற்றிகளை குவிப்பதற்கு ஆவிக்குரிய ஜெயத்தை பெறவேண்டிய தேவை உண்டு.தேவனுடைய முழு சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொண்டு யுத்தத்திகு ஆயத்தமாவோம் (எபே 6).

## ஜெப குறிப்புகள்

1. எவ்வித எதிர்ப்பையும் சமாளிக்கும்படியாக மலேசிய கிறிஸ்தவர்கள் நிலை நின்று ஒப்புக்கொடுத்தவர்களாக இருக்க ஜெபி.
2. அவரில் நிலைத்திருந்து, அவரில் சார்ந்து, அவரின் ஞானத்தில் நமது ஆவிக்குரிய யுத்தத்தை நடத்து(யோவான் 15:7).
3. தேவ கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து பலங்கொண்டு திடமனதாயிருக்க ஜெபி.

# தேசத்தையும் தேச மேம்பாட்டிலும் தாக்கம் ஏற்படுத்துதல்.

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்?வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது (மத் 5:13).

இயேசுவின் சீடர்களாகிய நமக்கு உப்பின் சாரமுண்டு.நம்மைக்கொண்டு தேசத்திற்கு தாக்கத்தை கொண்டுவர முடியும். நமது நம்பிக்கை, மதிப்பீடு, ஈடுபாடு போன்றவற்றினால் நமது தெரிந்தெடுப்பு, பேச்சு, நடவடிக்கை, மற்றும் ஜீவிய முறைமை நம் சமூகத்தை பாழாக்குவதிலிருந்து, நோவிலிருந்து, ஊழலிலிருந்து, அழிவிலிருந்து தாக்கம் உண்டாக்கி நேர்மையை பாதுகாக்கும்.

இருப்பினும் நமது உறவு மற்றவர்களோடு சரியான விதத்தில் இடைபட்டால்தான் தாக்கம் கொண்டு வர முடியும். புட்டிக்குள் இருக்கும் உப்பு எப்படி உணவில் தாக்கத்தை ஏற்படுத்தாதோ அது போல நமது அந்தரங்க பரிசுத்தம் சமூக சூழலில் மாற்றத்தை கொண்டுவராது.நம்முடைய தனித்த பரிசுத்தத்திலிருந்து சமுதாயத்தோடே இணைய வேண்டும்.மற்றவர்களோடு செய்யும் உரசலின் உறவில்தான் விளைவுகள் காணப்படும்.

தேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்துதல் என்பது எல்லா விசுவாசிகளுடைய ஒருமித்த பிரயாசம். சில சமூக கலாச்சாரத்தை மாற்றுவதற்கு எந்த அளவு உப்பு தேவைப்படும்?வெறும் 5%மே போதுமானது என டேவிட் போவ்சன் கூறுகிறார். சுமார் 9% கிறிஸ்தவர்கள் இந்த தேசத்தில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டுள்ளனர். சில ஸ்தலங்களில் நமது பிரசன்னம் அழுத்தமாகக் காணப்படவேண்டும்.அப்படி நம்மில் ஒவ்வொருவரும் சமூகத்தோடு ஒட்டி ஜீவிக்க கற்றுக்கொண்டால், உண்மையாகவே “தேவனுடைய இராஜ்ஜியம் இங்கு இருக்கிறது” எனக் கூறலாம்.

## ஜெப குறிப்புகள்

1. இயேசுவின் சீஷர்கள், ஒத்த வேஷந்தரியாமல் மாற்றல் கொண்ட பரிசுத்த வாழ்க்கையை தேவனுடைய நியமத்தின்படி உண்மைத்துவத்தை வெளிப்படுத்துகிற நிலையில் ஜீவிக்க ஜெபி.
2. சமுதாய விவகாரங்களில் ஒட்டி ஒழுகும்போது அநீதிக்கு எதிராக அன்போடும் தாழ்மையோடும் அதே சமயம் ஞானத்தோடும் மறுமொழி கொடுக்க ஜெபி.
3. நமது பிரசன்னம் குறைந்து காணப்படுகிற அரசாங்கத்துறையிலும் கல்வி வளாகங்களிலும் அதிகமான கிறிஸ்தவர்கள் இணைய ஜெபி.
4. ஒரே துறையில் இருந்து பணி செய்கிற விசுவாசிகள் ஒன்றுசேரவும் ஒருங்கிணைந்து தாக்கங்களை ஏற்படுத்தவும் ஜெபி.



NECF MALAYSIA

Prepared & Compiled by NECF Malaysia
32, Jalan SS2/103, Petaling Jaya
47300, Selangor Darul Ehsan, Malaysia
Tel:03-77278227 Fax:03-77291139
Email:prayer@necf.org.my
www.necf.org.my